49
49/2-63

# விக்கிரக வழிபாடு











RECORD OFFICE
MADRAS
92/62

சுவாமி சிவானந்தர்

# விக்கிரக வழிபாடு

நூலாசிரியர் :

**ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி**

SIVANANDA NILAYAM
சிவானந்த நிலையம்
மதுரை-1
PUBLISHERS ✳ MADURAI-1

மொழிபெயர்ப்பாளர் :

**கி. வானமாமலை**

Tamil Translation of
"The Philosophy and Significance of
Idol worship"

இ2
N63

* * *

Published by :

SIVANANDA NILAYAM,
3-Chockappa Naicker Street,
MADURAI - 1.
1 st Edition: February, 1963.

---

## சமர்ப்பணம்

தமிழ்நாட்டின் தனிப்பெருமையை தரணியெல்லாம் விளக்கிக்காட்டும் தனிப்பெருமை வாய்ந்த 'இமயஜோதி' ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் அரிய கருத்துக்களை உணர்ந்து வாழ்க்கையில் சிறப்புற்று விளங்க இந்நூல் அனைவருடையவும் திருக்கரங்களில் சமர்ப்பிக்கப்படுகிறது.

— கி. வானமாமலை

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
11071

All Rights Reserved by :
" THE SIVANANDA NILAYAM "

---

Printed at The South India Press, Karaikudi-1 .

# பதிப்புரை

“சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோஉயிர்க்கு.”

சிறப்பையும் செல்வத்தையும் அளிக்கும் அறத்தைவிட நன்மையானது உயிரினங்கட்கு வேறு கிடையாது. இவ்வறத்தின் பெருமையைச் சமயம் போதிக்கிறது.

பல்வேறு அம்சங்களைக் கொண்ட சமயத்தின் பெருமையைப் பெரியார் பலர் அரிய முறையில் தெரிவித்துள்ளார்கள். இவற்றுள் ‘இமயஜோதி’ ஸ்ரீ சுவாமி சிவானந்தர் அவர்கள் தெரிவிக்கும் முறை அலாதியானது.

அகில உலகையும் படைத்துக் காத்துவரும் அரிய சக்தியாம் பரம்பொருளை வழிபடுவதில் இரு வேறு பிரிவுகள் உள்ளன. அவற்றுள் உருவவழி பாட்டின் சிறப்பை இந்நூல் விளக்குகிறது. பகுத் தறிவுக்குப் பொருத்தமான முறையில் ஸ்ரீசுவாமிகள் தரும் விளக்கம் அறிவுக்கு விருந்தாக அமைந்து அனைவரையும் விழிப்புறச் செய்யுமாக.

— பதிப்பகத்தார்.

# உள்ளே உள்ளவை

1 உருவ வழிபாட்டின் உடன்பாடுகள்


2 திருக் கோயில்

3 பிரசாதத்தின் பெருமை

4 சின்னங்களின் சீரிய தத்துவம்

5 சிவலிங்க வழிபாடு

6 நம்பிக்கையும் விக்கிரக வழிபாடும்



# விக்கிரக வழிபாடு

## 1. உருவ வழிபாட்டின் உட்கருத்து!

பரமாத்மா அல்லது கடவுளின் முன்னிலையை அடைவதற்கு உபாசகன் அல்லது வழிபடுகிறவன் மேற்கொள்ளும் முயற்சியே வழிபாடு. உபாசனை என்பதற்கு கடவுளின் 'அருகே இருப்பது' என்பது தான் சொல்லர்த்தம். சாஸ்திரங்களிலடங்கியுள்ள போதனைகளின் பிரகாரமும் குருவின் உபதேசங்களின் படியும் இஷ்டதெய்வத்தை அணுகுவதோடு, அதே சிந்தனையில் தைலதாரை போன்று அமைவதே உபாசனையாகும். எதனால் சாதகன் அல்லது ஜிஜ்ஞாஸு ஆத்மீகத்துறையில் நன்கு முன்னேறி இறுதியில் தன்னையும், தன் இதயத்தில் இறையையும் உணருகிறானோ, அது சரீர, மனோ ரீதியாக அமையும் அவ்வெல்லா ஆசாரங்களையும் பயிற்சிகளையும் கொண்டதாக இருக்கிறது.

### உபாசனையின் நன்மைகள்

ஆண்டவனுடன் ஒன்றுபட பக்தனுக்கு உபாசனை உதவிபுரிகிறது. அது இதயத்தைத் தூய்மைப்படுத்தி மனத்தை ஒருநிலைப்படுத்துகிறது. மனதை அது சுத்த பாவத்தாலும், பிரேமபாவத்தாலும் நிரப்பி நிற்கிறது. படிப்படியாக அது மனிதனைத் தெய்வமாகவே ஆக்கி விடுகிறது.

உபாசனை மனப்பொருளை மாற்றியமைக்கிறது; ராஜஸ, தாமச குணங்களை இல்லாதாக்கி, மனதைச் சத்துவம் அல்லது தூய்மையால் நிரப்பி விடுகிறது. வாசனைகள், ஆசைகள், ஆணவம், காமவெறி, பகைமை, கோபம் முதலியவற்றை உபாசனை அழித்தொழித்து விடுகிறது. அது மனதை உள்முகமாகத் திருப்பி கடவுளுடன் நேருக்கு நேரில் கொண்டு நிறுத்தி பிறவிப் பெருங்கடலிலிருந்து விடுவித்து, அமரபதவியை யும் விடுதலையையும் அடையச் செய்கிறது.

குழவி-புழு நியாயத்தின் பிரகாரம் எதை தியானிக் கிறதோ அதற்கேற்றவாறு மனம் ஆகிவிடுகிறது. எண்ணுகிற மாதிரி ஆகிவிடுவது இயல்பு. இது மாற்ற முடியாத மனோதத்துவ நியதி. தியானிக்கிறவனையும் தியானப் பொருளையும் ஒன்றுபடுத்தும் எண்ணா வொண்ணா அற்புத சக்தி உபாசனையில் அமைந் துள்ளது.

தம்மிடம் பக்தி செலுத்துவதன் மூலமாகவே தன்னை அடைய முடியும் என்று அர்ஜுனனிடம் கண்ணன் தெரிவிப்பதாகக் கீதையில் நீங்கள் காணலாம்.

உபாசனையின் முக்கியத்துவத்தை தமது ராஜயோக சூத்திரங்களில் பல்வேறிடங்களில் பதஞ்சலிமகரிஷி வற்புறுத்துகிறார். ஒரு ராஜயோகிக்கும் உபாசனை தேவையானது. அவனுக்கும் தன் இஷ்டதெய்வம் ஒன்றிருக்கும். கடவுளிடம் சரணாகதியடைவதென்பது யோகத்தின் ஒரு அங்கமாகும். "உபாசனையின்மூலம் ஒருவன் சமாதியை அடையலாம்," என்று பதஞ்சலி கூறுகிறார்.

ஆத்மீக முன்னேற்றத்திற்குத் தேவையான

வற்றுள் உபாசனை இன்றியமையாததொன்ருக அமைகிறது. இது எல்லா வகுப்பாருக்கும், தரத்தாருக்கும் நன்மையளிப்பதாக இருக்கிறது. இது எளிதுமாகும்.

உண்பது, உள்நீர் அருந்துவது, உறங்குவது, பயப்படுவது, சிற்றின்பத்தில் ஈடுபடுவது முதலியவை மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் பொதுவானவை. ஆனல் ஒருவனை உண்மை மனிதனுக ஆக்குவது உபாசனைதான். உபாசனையின்றி புலன்வழி வாழ்க்கையில் வாழும் ஒருவன் மனிதனுகத் தோன்றினுலும் மிருகமேயாவான்!!

## சகுண, நிர்க்குண உபாசனைகள்

பிரதிக் உபாசனை என்றும் அகம்கிர உபாசனை என்றும் உபாசனை இரண்டு விதம். 'பிரதிக்' என்ருல் குறி. பிரதிக் உபாசனைதான் சகுண உபாசனை. அகம்கிர உபாசனை நிர்க்குண உபாசனை அல்லது அருவமான பிரம்மத்தின் மீதுள்ள தியானமாகும். உருவங்கள், சாளக்கிராமம், ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர், சிவபெருமான், காயத்ரி தேவி ஆகியவர்களின் படங்கள், இவற்றின் மீதமையும் தியானம் பிரதிக் உபாசனையாகும். பரந்து விரிந்தநீலவானம், சர்வவியாபகத் தன்மை பொருந்திய ஆகாயம், சூரியனின் எங்கும் நிறைந்த ஒளி ஆகியவையும் 'பிரதிக்' உபாசனைக்கு உரியவைகளாகும். சகுண உபாசனை என்பது ஒரு பொருளைத் தியானிப்பதாகும். நிர்க்குண உபாசனை தத்துவத்தைத் தியானிப்பதாகும்.

கடவுளின் லீலைகளைப் பற்றி கேட்பது, அவரது நாமத்தைப் பாடுவது, சதா அவரை நினைந்து நிற்பது, அவருடைய சரணரவிந்தங்களுக்குத் தொண்டு செய்வது, பூவினுல் அவருக்கு அர்ச்சனை செய்வது,

சாஷ்டாங்கமாக அவர் முன் தெண்டனிடுவது, பிரார்த்தனை செய்வது, மந்திரங்களை உச்சரிப்பது, ஆத்ம சரணாகதி செய்வது, பக்தர்களுக்குத் தொண்டு புரிவது, மனித சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நாராயண பாவத்துடன் சேவை செய்வது ஆகியவை சகுண உபாசனையின் அம்சங்களாகும்.

ஆத்மபாவத்துடன் 'ஓம்' என உச்சரிப்பது, ஆத்மபாவத்துடன் மனித சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தொண்டு செய்வது, பிரம்மபாவத்தடன் மனதிற்குள்ளேயே 'ஓம்' ஜபம் செய்வது, 'சோஹம்' 'சிவோஹம்' அல்லது 'அஹம் பிரம்மாஸ்மி' 'தத்துவம் அஸி' முதலிய மகா வாக்கியங்கள் மீது தியானம் செய்வது, நிர்க்குண உபாசனையின் அங்கங்களாகும். இதற்கு 'இதுவல்ல, இதுவல்ல' எனும் 'நேதி–நேதி' கோட்பாட்டினால் பொய்ப்பொருள்களை விட்டு அகல வேண்டும்.

சகுண உபாசனையே பக்தியோகம். நிர்க்குண உபாசனை ஞானயோகம். சகுண, நிர்க்குணப் பிரம்மத்தை வழிபடுகின்றவர்கள் அனைவரும் ஒரே லட்சியத்தையே அடைகிறார்கள். ஆனால் ஞானயோகப் பாதை மிகவும் கஷ்டமானது. தனது ஆத்மீக சாதனையின் ஆரம்பத்திலிருந்தே ஞானயோக சாதகன் தேகப்பற்றுதலை விட்டுவிடவேண்டும். தேகாபிமானமுடையவர்களுக்கு ஆண்டவனை அடைவது மிகவும் கஷ்டமான காரியமாக அமையும். மேலும் அரூபியான நிர்க்குணப் பிரம்மத்தில் மனதைப் பதிய வைப்பது மிகவும் கஷ்டமானதாகும். நிர்க்குணப் பிரம்மத்தைத் தியானிப்பதற்குக் கூரிய, ஒருமனப்பட்ட சூக்ஷ்மபுத்தி தேவைப்படுகிறது.

## பக்தியோக பாவங்கள்

பக்தியோகம் ஞானயோகத்தை விட மிகவும் எளிதானது. பக்தியோகத்தில் ஆண்டவனுடன் நெருங்கிய தொடர்பை பக்தன் ஏற்படுத்திக் கொள்கிறான். தனது ருசிக்கும் தகுதிக்கும் சுபாவத்திற்கும் ஏற்றவாறு அவன் ஐந்துவித பக்தி முறைகளுள் ஒன்றை வளர்த்துக் கொள்கிறான்.

சாந்த பாவம், தாஸ்யபாவம், சக்யபாவம், காந்தபாவம், மாதுரியபாவம், ஆகியவை பக்தனின் ஐந்துவித பக்திமுறைகளாகும். எண்ணங்களின் தரத்திற்கும் தீவிரத் தன்மைக்கும் உகந்தவாறு பக்தி முறைகள் வேறுபடுகின்றன. இம்முறையேதான் பல்வேறு பாவங்கள் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றன. பெற்றோர்களிடம் குழந்தைகள் கொண்டுள்ள பாவத்தைப் பிரகலாதனும் துருவனும் கொண்டு விளங்கினர். இது சாந்த பாவம். தாஸ்யபாவத்தில், பக்தர்கள் வேலைக்காரனைப்போன்று நடந்துகொள்கின்றனர். அவனுடைய இஷ்டதெய்வமே அவனுடைய யஜமானன். ஹனுமான் இறைவனின் லட்சியப் பணியாளர். சக்யபாவத்தில் சம உணர்ச்சி ஏற்படுகிறது. அர்ஜுனனும், குசேலனும் இத்தகைய தோழமையுணர்ச்சியில் வாழ்ந்தனர். வாத்ஸல்ய பாவத்தில் பக்தன் பரமனைத் தன் குழந்தையாகப் பாவிக்கிறான். ஸ்ரீகிருஷ்ணனிடம் யசோதைக்கு இந்த பாவமே இருந்தது. ஸ்ரீராமனிடம் கோசலை இதே பாவத்தைக் கொண்டிருந்தாள். மனைவி கணவனிடம் கொண்டுள்ள பாவமே காந்தபாவம். சீதையும் ருக்மணியும் இதே பாவத்தைக் கொண்டு விளங்கினர். முடிவு மதுர பாவத்தில்தான் அடையப்படுகிறது. அன்பின் ஆழத்தினால் காதலனும் காதலியும் ஒன்றுகின்றனர்; இறை

வனும் அவரிடம் மெய்க்காதல் கொண்ட பக்தனும் ஒன்ருகின்றனர். இத்தகைய பாவம் ராதையிடமும் மீராவிடமும் தங்கிநின்றது.

கடைசியாகத் தெரிவிக்கப்பட்ட மாதுரியபாவந்தான் பக்தியின் இறுதிநிலே. இறைவனுடன் இரண்டறக் கலப்பதே அது. கடவுளேப் பக்தன் வாயாரப் புகழ்கிருன். அவரை இடைவிடாது எண்ணி நிற்கிருன். அவரது நாமங்கள் கொண்ட கீர்த்தனங்களேப் பாடிக் கூத்தாடுகிருன். பிரார்த்தனே செய்து கொண்டே சாஷ்டாங்கமாக விழுந்து அவரை அவன் வணங்கு கிருன். அவரது லீலேகளேப் பற்றிய வரலாறுகளேயே கேட்டவண்ணமிருக்கிருன். நிபந்தனேயற்ற சரணுகதி யடைந்து அவரது திருவருளேப்பெற்று இறுதியில் அவருடன் ஒன்றுபட்டு இரண்டறக் கலந்துவிடுகிருன்.

மாதுரிய பாவத்தில் பரமனுக்கும் பக்தனுக்கு மிடையே மிக நெருங்கிய உறவு நிலவுகிறது. காந்த, மாதுரிய பாவங்களில் புலன்வழிச்செயல்கள் நின்றுவிடு கின்றன. மிருகஉணர்ச்சி என்பது பக்தனிடம் சிறிது மில்லாதாகிவிடுகிறது. தங்களுடைய மனம் சிற்றின்ப எண்ணங்களாலும் கீழ்த்தரமான உணர்ச்சிகளாலும் நிறைந்து கிடப்பதால் உணர்ச்சிவசப்பட்டவர்களால் இவ்விரு பாவங்களின் பெருமையைத் தெரிந்து கொள் வது அரிது. "சூபி" சம்பிரதாயத்தைச் சேர்ந்த இஸ் லாமியப் பெரியார்களிடம் இந்த பாவமே பதிந்திருக் கிறது. ஸ்ரீ ஜயதேவர் அருளிய கீதகோவிந்தத்தில் இந்த மாதுரிய பாவமே மிகுந்து காணப்படுகிறது. பரம பக்தர்கள் உபயோகிக்கும் அன்பு வார்த்தைகளே உல கியல் மனிதர்களால் புரிந்து கொள்ளுதல் அசாத்யம். கோபிகைகள், ராதை, மீரா, துக்காராம், நாரதர்,ஹபீஸ்

ஆகியோர்கள் தான் அந்த மொழியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலுடையவர்கள்.

## பூசையும் இஷ்டதேவதையும்

வழிபாட்டு முறைகளுக்குரிய பொதுப் பெயரே பூசை. அது பலவகைப்படும். அவைதாம் அர்ச்சனை, வந்தனம், பசனை முதலியன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அம்சத்தை வற்புறுத்துகிறது. வழிபாட்டிற் குரிய பொருள் தான் இஷ்டதேவதை. விஷ்ணு அல்லது அவரது அவதாரங்களான ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் என்பவை வைஷ்ணவர்களுக்கும், சைவர்கள் விஷயத்தில் எட்டு உருவங்களில் சிவனும், சாக்தர்கள் விஷயத்தில் தேவியும் இஷ்டதேவதை களாக அமையும்.

சில நேரங்களில் பக்தன் தனது குலதேவதையை இஷ்டதேவதையாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறன். மற்றும் சில சமயங்களில் குருவே இஷ்ட தேவதையைத் தேர்ந்தெடுத்துக் கூறுவதும் உண்டு. தனக்கு மிகவும் பிடித்தமான தேவதையைத் தேர்ந் தெடுத்துக் கொள்வதும் வழக்கம். இந்த உருவமே அவன் இஷ்ட தேவதை.

வெளிப் பூசைக்காக, ஒரு விக்கிரகமோ, படமோ, விஷ்ணு வழிபாட்டில் செய்வதுபோன்று ஒரு சாளிக் கிராமமோ, அல்லது சிவவழிபாட்டிலுள்ளதுபோன்ற லிங்கமோ உபயோகப்படுத்தப்படுகிறது.

எல்லாப் பொருள்களும் வழிபாட்டுக்குரியவையாக அமையுமாகுலும் மனதில் ஏற்படும் விளைவைப்

பொறுத்தே அவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஒரு விக்கிரகம் அல்லது மேல்குறிப்பிட்டது போன்றதோர் பொருள் வழிபடுகிறவனின் மனதில் ஒரு தேவதையின் எண்ணத்தை ஏற்படுத்தக் கூடும். சாளிக்கிராமக்கல் எளிதிலே மனஒருமைப்பாட்டை ஏற்படுத்துகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு குறி அல்லது விக்கிரகத்தினிடம் மிகுந்த பற்றிருப்பது இயற்கை. உருவம் அல்லது விக்கிரகம், சூரியன், அக்கினி, தண்ணீர், கங்கை, சாளிக்கிராமம், லிங்கம் அனைத்தும் சாதகனிடம் மன ஒருமைப்பாட்டையும் இதயத்தூய்மையையும் ஏற்படுத்த உதவும் கடவுளின் சின்னங்களாகும். தன்னிடம் ஏற்படும் விசேஷ விளைவு காரணமாகத் தோன்றும் நம்பிக்கையின் விளைவாக வழிபடுகிறவனிடம் உண்டாகும் தனிப்பட்ட முனைவே இவை. மனோதத்துவ ரீதியாகப் பார்த்தால்,குறிப்பிட்ட மனம் குறிப்பிட்டகருவிகள் அல்லது சின்னங்கள் அல்லது விக்கிரகங்களின் மூலம் விரும்பப்படும் திசையில் நன்கு செயல்படுகிறது என்பதே இவற்றின் பொருள்.

மக்கள்சமுதாயத்தில் பெரும்பாலோர் தூய்மையற்ற முறையிலோ அல்லது பலகீனமான முறையிலோ அமையும் மனத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே வழிபாட்டுக்குரிய பொருள் இவர்களுக்கு பரிசுத்தமானதாக இருக்கவேண்டும். காமவிகாரத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தக் கூடிய பொருள்களை விலக்கி விடவேண்டும். ஆனால், தூயமனமுடைய சாதகன், எங்கும் எல்லாவற்றிலும் தெய்வீகத் தோற்றத்தைக் காணும் சாதகன், எந்தவிதப் பொருளையும் வணங்கலாம்.

பூசையில் வழிபாட்டுக்குரிய பொருளாக ஏதாவது தெய்வீகத்தோற்றத்தைக் குறிக்கும் ஒரு விக்கிரகமோ

அல்லது படமோ பயன்படுத்தப்படுகிறது. விக்கிரகம் ஒரு குறிப்பிட்ட தேவனைக்குறிக்கிறது. லிங்கம் சிவனைக் குறிக்கிறது. அது இரண்டற்ற, உருவமற்ற பிரம்மனைக் குறிக்கிறது. "ஏகமேவாத்விதீயம் பிரம்ம :—பிரம்மம் இரண்டற்ற ஒன்ருக இருக்கிறது.", என்று சுருதி தெரிவிக்கிறது. இங்கு இருமை என்பது கிடையாது. லிங்கம் பிரகாசமுடையதாகவும் கண்ணுக்குக் கவர்ச்சிகரமாகவும் இருக்கிறது. மனஒருமைப்பாட்டுக்கு அது உதவுகிறது. லிங்கத்தை வழிபட்டுத்தான் இராவணன் சிவபெருமானிடமிருந்து பல வரங்களைப் பெற்ருன்.

சாளிக்கிராமம் என்பது விஷ்ணுவின் விக்கிரகமாகும். அது விஷ்ணுவின் சின்னம். ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர், கார்த்திகேயர், கணேசர், ஹனுமான், தத்தாத்திரேயர், சீதை, லக்ஷ்மி, பார்வதி, துர்க்கை, காளி, சரஸ்வதி முதலிய விக்கிரகங்களும் குறிப்பிட்ட பக்தனின் ருசிக்கொத்த முறையில் வழிபடப்பட்டு வருகின்றன.

விஷ்ணுவினுடையவும் அவருடைய அவதாரங்களுடையவும் விக்கிரகங்களும், சக்தி, சிவன் ஆகியோரின் விக்கிரகங்களும் கோவில்களிலும் வீடுகளிலும் வழிபடப்பட்டுவரும் பிரசித்தமான விக்கிரகங்களாகும். திருப்பதி, பண்டரிபுரம், பழனி, கதிர்காமம் முதலிய இடங்களிலமையும் கோவில்களிலுள்ள விக்கிரகங்கள் மிக சக்தி வாய்ந்தவை. அவை பிரத்யக்ஷ தேவதைகள். பக்தர்களுக்கு வரங்களை அளித்து, பிணிகளைக் குணப்படுத்தி, அவை தரிசனமும் அளிக்கின்றன. இந்த தேவதைகள் அதியற்புத லீலைகள் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்து மதத்தில் இரண்டாவது கடவுள் கிடையாது. சிவன், விஷ்ணு, பிரம்மா, சக்தி அனைத்தும் ஒரே கடவுளின் பல்வேறு தன்மைகளேயாம்.

பக்தர்களுக்குப் பகவான் பலவழிகளில் வெளிப்படுகிருர். பக்தன் தேர்ந்தெடுத்துள்ள உருவத்தில் அவர் வெளிப்படுகிருர். "பகவான் ஹ்ரி"யாக அவரை வழிபட்டால், நான்கு கைகளையுடைய ஹரியாக அவர் அவன்முன் தோன்றி நிற்பார். சிவனாக வழிபட்டால் உங்கள் முன் அவர் சிவனாக வருவார். துர்க்கை அல்லது காளியாக நீங்கள் வழிபட்டால், அவர் அங்ஙனமே தோன்றுவார். ஸ்ரீராமனாகவோ, ஸ்ரீ கிருஷ்ணனாகவோ, பகவான் தத்தாத்திரேயராகவோ அவரை நீங்கள் வழிபட்டால் அவர் அங்ஙனமே உங்களிடம் வந்து தோன்றுவார். கிறிஸ்துவாகவோ, அல்லாவாகவோ நீங்கள் அவரை வழிபட்டால், அவரும் கிறிஸ்துவாகவோ, அல்லாவாகவோ உங்களிடம் ஓடிவருவார்.

எந்த நாமரூபத்தில் நீங்கள் வழிபட்டாலும் கடவுளைத்தான் நீங்கள் வழிபடுகிறீர்கள். அந்த ஒரே கடவுள்தான் வணங்கப்படுகிருர். உருவத்தின் உள்ளுறைகின்ற அந்தக் கடவுளுக்கே வழிபாடு செய்யப்படுகிறது. ஒரு உருவம் மற்ருென்றைவிடச் சிறந்தது, உயர்ந்தது என்று எண்ணுவது அறியாமை. எல்லா உருவங்களும் ஒன்றே. சிவன், விஷ்ணு, காயத்திரி, ராமன், கிருஷ்ணன், தேவி, பிரம்மன் எல்லாம் ஒன்றே. எல்லாம் ஒரே ஈசுவரனையே குறித்து நிற்கின்றன. வித்தியாசம் பெயர்களினுல் ஏற்படுகின்றவையே. இது வழிபடுகிறவர்களிடமுள்ள வித்தியாசத் தன்மையினுல் ஏற்படுகிறதேயன்றி வழிபடும் பொருளிலுள்ள வித்தியாசத்தினுலல்ல. பல்வேறு மதத்தினரும், மதப் பிரிவினரும் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ளுவது அறியாமையினுல் அன்றி மற்றில்லை.

N165



## விக்கிரகம்- ஆரம்பசாதகனுக்கு அவசியமானது

ஆரம்ப சாதகனுக்கு விக்கிரகம் ஒரு உதவியாக இருக்கிறது. ஆரம்பத்தில் வழிபாடு செய்ய ஒரு உருவம் அல்லது விக்கிரகம் அவசியமானதாக இருக்கிறது. வழிபடுவதற்குக் கடவுளின் புறச்சின்னமாக அது அமைகிறது. கடவுளை நினைவூட்டுவதாக அது விளங்கு கிறது. விக்கிரகம் மனதில் உயரிய எண்ணத்தை உண்டுபண்ணுகிறது. விக்கிரக வழிபாட்டினால் மனம் ஒரு நிலைப்படுகிறது. எல்லையற்ற தன்மை, சர்வவல்ல மைத் தன்மை, சர்வக்ஞத்துவம், சர்வவியாபகத்துவம், தூய்மை, பூரணத் தன்மை, சுதந்திரத்தன்மை, புனிதத் தன்மை, உண்மை ஆகியவற்றின் எண்ணங்களை வழிபடுகிறவன் தன் மனதில் கொள்ளவேண்டும். பரம் பொருளின் உருவமற்ற தன்மையில் மனதை ஒன்றச் செய்வது எல்லோருக்கும் சாத்தியப்படாததொன்றாகும். பெரும்பாலோருக்கும் மன ஒருமைப்பாட்டை அப்பிய சிக்க ஒரு உறுதியான உருவம் தேவைப்படுகிறது. கடவுளை எங்கும் காணும் தன்மையைச் சாதாரண மனிதனால் பெறமுடியாது. நவீனகால மனிதனுக்கு உருவ வழிபாடே எளிதானதாகும்.

மனதை ஒன்றச் செய்வதற்கு ஒரு விக்கிரகம் இன்றியமையாததாகும். பற்றிநிற்க மனதிற்கு ஏதாவ தொன்று தேவைப்படுகிறது. ஆரம்ப நிலைகளில் பரம் பொருளை மனதினால் உணர முடியாது. புற உதவி யின்றி ஆரம்ப நிலைகளில் மனம் ஒருநிலைப்படுவது முடியாத காரியம். எனவே ஆரம்பத்தில் விக்கிரகம் அல்லது சின்னமின்றி மனஒருமைப்பாடோ தியானமோ சாத்தியமில்லை என்பது தெளிவு.

## அனைவரும் உருவ வழிபாட்டுக்காரர்கள்

வேதங்களில் விக்கிரக வழிபாட்டைக் குறித்த குறிப்பேதும் காணப்படவில்லை. வீடுகளிலும் கோவில் களிலும் அமையும் விக்கிரக வழிபாட்டின் விளக்கத்தைப் புராணங்களும் ஆகமங்களும் தெரிவித்துள்ளன. விக்கிரக வழிபாடு இந்து மதத்திற்கு மட்டும் உரியதல்ல. கிறிஸ்த வர்கள் சிலுவையை வழிபடுகிறார்கள். சிலுவையின் உருவத்தை அவர்கள் மனதில் கொண்டுள்ளனர். மொகம்மதியர்கள் தாங்கள் பிரார்த்தனை செய்யும் பொழுது "காபா-கல்"லின் உருவத்தை மனதில் எண்ணுகின்றனர். ஒருசில யோகிகளையும் வேதாந்தி களையும் தவிர உலகத்தின் மற்றெல்லா மக்களும் விக்கிரகத்தை வழிபடுகிறவர்களேயாவர். அவர்கள் ஏதாவதொன்றின் உருவத்தை மனதில் கொள்ளு கின்றனர்.

மன உருவமும் விக்கிரகத்தின் ஒருவகையேயாகும். எவ்வளவு சிறந்த அறிவாளிகளாக இருந்தாலும் சரிதான், பக்தர்கள் எல்லோரும் மனதில் ஒரு உருவத்தை உண்டாக்கி அதிலேயே தங்கள் மனதை ஒன்றுபடச் செய்கின்றனர்.

அனைவரும் விக்கிரக வழிபாட்டுக்காரர்களே. படங்கள், ஓவியங்கள் முதலியன விக்கிரகத்தின் ஒரு வகைத் தோற்றமே. தூல மனத்திற்கு ஒரு உருவம் தேவைப்படுகிறது. சூக்ஷ்ம மனத்திற்கு சூக்ஷ்ம உருவம் அவசியமாகிறது. அலையும் மனதை ஒன்றச் செய்ய வேதாந்தத்தில்கூட 'ஓம்' என்ற சின்னம் இருந்து வருகிறது. கல்லினாலும் மரத்தினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களும் சித்திரங்களும்தான்

விக்கிரகங்கள் என்று எண்ணி விடாதீர்கள். தலைவர்களும் அரசியல் கோட்பாடுகளும் கூட விக்கிரகங்களாகி விடுகின்றன. இந்நிலையில், விக்கிரக வழிபாட்டைக் கண்டனம் செய்வது முறையாகுமா?

## கடவுளுடன் தொடர்பு கொள்ளுவதற்கானதோர் கருவி

விக்கிரகங்கள் சிற்பிகளின் கைத்திறன் மட்டுமல்லாது பக்தனின் இதயத்தைக் கடவுள்பால் ஈர்த்துச் செல்லும் பிரகாசம் பொருந்திய கால்வாய்களாகவும் அமைகின்றன. விக்கிரகம்தான் வழிபடப் படுகிறது என்றாலும், பக்தன் அதில் கடவுளது தோற்றத்தைக் காண்கிறான்; பக்தியை அதில் அப்படியே கொட்டுகிறான். புலன் வழி இன்பங்களின்பின்செல்லும் நவயுக மனிதனிடமுள்ள அறியாமைதான் அவனது பார்வையை மறைத்து, கடவுளின் தோற்றங்களாக அமையும் அழகிய விக்கிரகங்களில் தெய்வீகத் தன்மையைக் காண்பதிலிருந்து அவனைத் தடை செய்கிறது. இந்த நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றமே விக்கிரக வழிபாட்டின் பெருமையை உங்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். ரேடியோ என்று கூறப்படும் சிறிய பெட்டிக்குள் பாடகர்களும் பேச்சாளர்களும் எங்ஙனம் அடைபட்டுக் கிடக்கின்றனர்? தூக்கித் தூரத்தில் எறியப்பட்டால் சுக்கு நூறாகி விடக்கூடிய உயிரற்றதோர் இயந்திர அமைப்பே அது. எனினும் அதைக் கையாளத் தெரிந்து விட்டால், அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் பாடப்படும் சங்கீத நிகழ்ச்சிகளையும் உலகின் ஒதுங்கின மூலைகளில் பேசப்படும் சொற்பொழிவுகளையும் உங்களால் கேட்க முடியும்.

ரேடியோவின் மூலம் உலகெங்கிலுமுள்ள மக்களின் ஒலி அலைகளை நீங்கள் பிடிக்க முடிவதைப் போன்று, ஒரு விக்கிரகத்தின் மூலம் சர்வ: வியாபியான கடவுளுடன் தொடர்பு கொள்வதும் சாத்தியமாகும். சர்வ வியாபியான கடவுளின் தெய்வீகத் தன்மை படைப்பின் ஒவ்வொரு அணுவிலும் அலை மோதுகிறது. அவர் இல்லாத இடம் ஒரு அணுவளவேனும் கிடையாது. பின், ஏன் விக்கிரகத்தில் அவர் இல்லை என்று நீங்கள் கூறுகின்றீர்கள்?

"சர்வ வியாபியான உருவமற்ற தன்மையே கடவுள். அவரை எங்ஙனம் இந்த விக்கிரகத்தில் பதியவைக்க முடியும்? அவரது எங்கும் பரந்த தன்மையை இந்த மக்கள் எப்பொழுதாவது அறிவார்களா? அவரை எல்லாவற்றிலும் எப்பொழுதும் இவர்கள் காண்கிறார்களா? இல்லை," என்று கூறுகின்றவர்களும் இருக்கிறார்கள். கடவுளின் விக்கிரகங்களிடம் வணக்கம் செலுத்துவதிலிருந்து அவர்களைத் தடைசெய்வது அவர்களிடம் நிலவும் அறியாமை தான். அதே காரணத்தினால் அவர்கள் இந்த நொண்டிச் சாக்கைத் தெரிவிக்கின்றனர்!

வெறும்பாத்திரம் மிகுந்த ஓசையை உண்டுபண்ணுகிறது. பிரார்த்தனையிலும் வழிபாட்டிலும் முழுமனதுடன் ஈடுபட்டுள்ள நடைமுறை மனிதன், ஞானமும் உண்மைப் பக்தியும் நிரம்பினவனாக எப்பொழுதும் மௌனமாகவே இருக்கிறான். மௌனத்தின் மூலம் அவன் மற்றவர்களுக்குப் போதிக்கிறான். சாதனையின் ஆரம்ப நிலையில் மன ஒன்றித்தலுக்கு ஒரு மூர்த்தி வேண்டுமா வேண்டாமா என்பதை அவனே அறிவான்.

எவ்வளவு பெரும் அறிஞனாக இருப்பினும் சரி, ஆரம்பத்தில் ஒருவனால் ஒரு உருவத்தின் உதவியின்றி

மனதை ஒருநிலைப்படுத்த முடியாது. "எனக்கு மூர்த்தி அல்லது விக்கிரகம் பிடிக்காது. ஒரு உருவத்தில் தியானம் செய்ய எனக்கு விருப்பமில்லை,'' என்று கர்வத்தினாலும் வீணத்தனத்தினாலுமே படித்தறிந்த நபர் ஒருவன் கூறுகிறான். உருவமற்ற ஒன்றில் அவனால் மனதை ஒன்றச்செய்ய முடியாது. உருவ வழிபாடு செய்கிறவன் என்று தெரிந்தால் தன்னைப் பிறர் பரிகசிக்கக் கூடும் என்று அவன் எண்ணுகிறான். அருவத்தை அவன் ஒருபொழுதும் தியானிப்பது கிடையாது. அவன் சும்மா பேசி வீண்தர்க்கம் செய்து வாதாடுகிறான்! அவசியமற்ற வாதப்பிரதி வாதங்களில் அவன் வாழ்வை வீணாக்குகிறான். புத்தக அறிவை விட நடைமுறை அனுபவமே சாலச் சிறந்தது. அறிவு படைத்த பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அவர்களிடமுள்ள அறிவே இடைஞ்சலாக இருக்கிறது! மனதின் கற்பனையே பிரம்ம மென்றும், போலிக்கருத்தே சமாதி என்றும், வேதாந்திகளின் போலி எண்ணமே ஆத்மானுபூதி என்றும் அவர்கள் கூறுகின்றனர்! அவர்கள் அறியாமை யில் நிற்பவர்கள்!! அவர்கள் ஆழ்ந்த அஞ்ஞானத்தில் திளைத்தவர்கள். அவர்கள் வெறும் வறட்டு அறிவால் அடித்துச் செல்லப்படுகின்றனர். அவ்வறிவு ஆத்மீக அறிவோடு ஒப்பிட்டால் பதருகவே முடியும். அத்தகைய மக்களுக்கு மோட்சம் என்பதே கிடையாது. முதலில் அவர்களிடமுள்ள தீய சம்ஸ்காரங்கள், சத்சங்கத்தி னாலும் நல்ல சம்ஸ்காரங்களினாலும் அப்புறப்படுத்தப் படவேண்டும். அப்பொழுதுதான் தங்களிடமுள்ள குறைகளை அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். தெளிந்த அறிவையும் உண்மை ஞானத்திற்கான வேட்கை யையும் இறைவன் அவர்களிடம் அருளுவானாக!

## கடவுளின் குறி!

பிரதிமை அல்லது விக்கிரகம் ஒரு பிரதி ரூபமாகும். கோவிலிலுள்ள விக்கிரகம் கல்லினலோ அல்லது மரத்தினலோ அல்லது உலோகத்தினலோ செய்யப்பட்டிருந்தாலும் கடவுளின் குறியைக் கொண்டிருப்பதால் அது பக்தனுக்கு மிகவும் மதிப்புடையதாக இருக்கிறது. புனிதமானதாகவும் நித்தியமானதாகவும் அவன் அதை எண்ணுகிருன். ஒரு கொடி வர்ணம் தீட்டப்பட்ட சிறியதோர் துணிதான். ஆனல் ஒரு ராணுவ வீரனுக்கு அது மிகவும் மதிப்புடையதொன்ருகும். அந்தக் கொடியின் மதிப்பைக் காப்பாற்றத் தன் உயிரையும் தியாகம் செய்ய அந்தப் படைவீரன் தயாராக இருக்கிருன். அதே போன்று பக்தனுக்கு விக்கிரகம் மிகவும் பிரியமானது. அதற்குரிய பக்திமொழியில் அது அவனுடன் பேசுகிறது. படை வீரனிடம் தைரியத்தைத் தேசங்கொடி தூண்டுவதுபோல், பக்தனிடம் விக்கிரகம் பக்தியைத் தூண்டுகிறது. விக்கிரகத்தில் ஆரோகணிக்கப்பட்டுள்ளார் கடவுள். அத்தகைய பிம்பம் வழிபடுகிறவனிடம் தெய்வீக எண்ணங்களை உண்டாக்குகிறது.

சாதாரண வெள்ளை அல்லது வர்ணக் கடுதாசிக்கு மதிப்பு ஏதும் கிடையாது. நீங்கள் அதைத் தூரத்தில் எறிந்து விடுகிறீர்கள். ஆனல் அதில் ஒரு ஸ்டாம்போ, அல்லது அரசாங்க முத்திரையோ (ரூபாய் நோட்டு) இருந்தால் உங்கள் பணப்பையிலோ பெட்டியிலோ அதை நீங்கள் பத்திரப்படுத்தி வைக்கிறீர்கள். அதே போல், சாதாரணக் கல்லுக்கு நீங்கள் மதிப்புக்கொடுப்பதில்லை. அதை வீசி எறிந்து விடுகிறீர்கள். ஆனல், பண்டரிபுரத்தில் பகவான் கண்ணனின் கல் மூர்த்தியைக் காணும் பொழுதோ, அல்லது மற்றும் கோவில்களிலுள்ள ஏனைய மூர்த்திகளைப் பார்க்கும் பொழுதோ,

கரம் குவித்து அவற்றிற்கு வணக்கம் செலுத்து கிறீர்கள். இதற்குக்காரணம் அந்தக் கல்லில் இறைவன் ஆவாகனம் செய்யப்பட்டுள்ளதால்தான். தனது இஷ்ட தேவனின் தன்மைகளை எல்லாம் பக்தன் அந்தக் கல் விக்கிரகத்தில் ஏற்றி நிறுத்துகிறுன்.

"இந்த விக்கிரகம் ஜய்பூரிலிருந்து வந்தது. இதைப் பிரபுசிங்தான் கொண்டுவந்தான். இதன் எடை 50 ராத்தல். இது வெள்ளைச் சலவைக் கல்லினுல் செய்யப்பட்டது. ரூ 500 இதற்குச் செலவாகியுள்ளது," என்று அந்த விக்கிரகத்தை வழிபடும்பொழுது நீங்கள் கூறுகிறதில்லை. அந்த விக்கிரகத்தில் இறைவனின் பண்புகளையெல்லாம் ஏற்றி, "அந்தர்யாமியாக விளங்கும் எம்பெருமானே!! நீ சர்வவியாபி; சர்வஞ்ஞன்; சர்வவல்லமை பொருந்தியவன்; சர்வகாருணிகன். எல்லாவற்றுக்கும் உறைவிடம் நீயே. நீ சுயம் ஜோதி. நீயே சச்சிதானந்தம். நீ நித்தியன்; மாற்றமில்லாதவன். எனது உயிருக்கு உயிராக விளங்கும் நீதான் எனது ஆத்மாவுக்கும் ஆத்மாவாக விளங்குகிருய்! எனக்குப் பிரகாசத்தையும் அறிவையும் தருவாயாக! சதா நான் உன்னிலேயே வசிப்பேனுக"!! என்று நீங்கள் பிரார்த் தனை செய்கிறீர்கள். உங்கள் பக்தியும் தியானமும் தீவிரமாகும் நேரத்தில் நீங்கள் வெறும் கல்விக்கிரகத் தைக் காண்கிறதில்லை. சைதன்னியமாக இருக்கும் இறைவனை நீங்கள் அங்கு காண்கிறீர்கள். எனவே உருவவழிபாடு ஆரம்ப சாதகர்களுக்கு அத்தியாவசிய மானதொன்ருகும்.

## விராட்டின் அம்சம்

ஆரம்ப நிலையிலுள்ள சாதகனுக்கு பிரதிமை அல்லது உருவம் மிகவும் தேவையானதொன்ருகும்.

விக்கிரகத்தை வழிபடுவதனால் ஈசுவரன் திருப்தியடைகிறார். பிரதிமையும் பஞ்ச பூதங்களாலாகியது. கடவுளின் சரீரத்தையும் ஐம்பெரும் பூதங்களே ஆக்குகின்றன. விக்கிரகம் விக்கிரகமாகவே இருந்து வருகிறது. ஆனால் வழிபாடு கடவுளைச் சென்று சேருகிறது.

ஒரு நபருடன் கைகுலுக்கினால் அவருக்கு அது மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அவரது சரீரத்தின் ஒரு சிறிய பகுதியையே நீங்கள் தொட்டீர்கள் என்றாலும் அவருக்கு அது திருப்திகரமாக அமைந்துவிடுகிறது. அவர் சிரித்த முகத்துடன் உங்களை வரவேற்கிறார். அதேமாதிரி, தமது பெரும் சரீரத்தின் சிறுபகுதியை வழிபடுவதால் கடவுள் மிக்க திருப்தியடைகிறார். விக்கிரகம் கடவுளின் பெரும் சரீரத்தின் சிறு பகுதியேயாகும். இவ்வுலகமனைத்தும் அவரது சரீரம், விராட் சொரூபம். பக்தி அவரைச் சேருகிறது. ஆண்டவனுக்குரிய அரிய பண்புகளை அந்த விக்கிரகத்தில் ஏற்றிப் பக்தன் வழிபடுகிறான். அவன் அதற்கு ஷோடசோபசாரம் செய்கிறான். அலையும் மனம் இத்தகைய வழிபாட்டில் ஒன்றிக்கப்படுகிறது. இறைவனோடுள்ள அடுப்பத்தைச் சாதகன் மெல்ல மெல்ல உணருகிறான். அவன் இதயத்தூய்மையைப் பெற்று, மெதுவாக ஆணவமும் நீங்கப்பெறுகிறான்.

உருவத்தை நம்புகிற சாதகனுக்கு கல், களிமண், பித்தளை, படம், சாளிக்கிராமம் முதலிய எம்முறையில் அமைந்திருந்தாலும் அவ்வுருவம் ஆண்டவனின் சரீரமேயாகும். அத்தகைய வழிபாடு வெறும் பிம்ப வழிபாடாகாது. எல்லாப் பொருளும் கடவுளின் தோற்றமேயாகும். எல்லாப் பொருளிலும் இறைவனே வாசம் செய்கிறார். எல்லாப் பொருளும் கட.வுளின் தோற்றம்

ஆதலால் அனைத்தும் வழிபாட்டுக்குரிய பொருள் களேயாம். வழிபடும் தன்மையே வழிபடும் பொருள் சிறப்புடைய தென்பதைக் குறிக்கிறது. இந்த முறையில் பொருள்களைக் காண்பதென்பது பக்தனிடம் அமைய வேண்டும். மேற்கூறிய முறையில் பொருள்களைக் கண்ணுற பயிற்சியற்ற மனம் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

## விக்கிரக வழிபாட்டினால் பக்தியின் அபிவிருத்தி

மன ஒருமைப்பாட்டை விக்கிரக வழிபாடு எளிதாக்கு கிறது. நீங்கள் பார்க்கும் அந்த அவதாரங்களில் பகவான் புரிந்துள்ள லீலைகளை உங்கள் மனக்கண்முன் உங்களால் கொண்டுவர முடியும். இது ஆத்மானுபூதிக் கான மிக எளிய வழிகளில் ஒன்றாகும்.

புகழ்மிகும் போர்வீரன் ஒருவனின் படம் உங்கள் மனதில் வீர உணர்ச்சியைத் தூண்டுவது போல் கடவுளின் படத்தைப் பார்த்ததும் உங்கள் மனதில் தெய்வீக எண்ணங்கள் தோன்றி நிற்கும். பொம்மையுடன் விளையாடு கின்ற குழந்தையின் உள்ளத்தில் தாயெண்ணம் தோன்றி நிற்பதுபோல், பிரதிமையை வழிபடுகிற பக்தனிடம் பக்தி வளர்ச்சியடைகிறது.

## முறையான வழிபாட்டினால் விக்கிரகத்தில் தெய்வீகத்தன்மை வெளிப்படுதல்

முறையான வழிபாடு, பூஜை, மற்றும் விக்கிரகத்தில் அடங்கியுள்ள தெய்வீகத் தன்மையை ஒப்புக்கொள்

வதற்குரிய நம் உள்ளுணர்ச்சிகளை வெளிக்காட்டு வதற்கான ஏனைய முறைகள் முதலியன பிம்பத்தில் மறைந்துள்ள தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்து கின்றன. இது உண்மையாகவே அற்புதமானதும் அதிசயிக்கத்தக்கதுமாகும். படத்திற்கு உயிர் வந்துவிடு கிறது! விக்கிரகம் பேசுகிறது!! உங்கள் கேள்விகளுக்கு அது விடை தருகிறது. உங்கள் பிரச்னைகளை அது தீர்த்துவைக்கிறது. உங்களிடமுள்ள கடவுளுக்கு விக்கிரகத்தில் மறைந்துகிடக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கானசக்தி இருக்கிறது. இது சூரிய கிரணங்களைத் தன்மூலம் செல்ல விடுவதால் பருத்தி மூட்டையை எரிப்பதற்கான தீயை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த 'லென்ஸ்' போன்றதாகும். அந்த 'லென்ஸ்' தீயல்ல. பஞ்சும் தீயல்ல. மேலும் சூரிய கிரணங்கள் தாமாகப் பஞ்சை எரிக்க முடியாது. மூன்றும் குறிப்பிட்ட முறையில் அருகிலே கொண்டுவரப்படும்பொழுது தீ ஏற்பட்டு பஞ்சு எரிக்கப்படுகிறது. இதே நிலைமைதான் விக்கிரகம், சாதகன், சர்வவியாபியான கடவுளுடையது மாகும். பூஜைதான் பிரதிமைக்கு தெய்வீகத் தேஜஸை அளிக்கிறது. அப்பொழுது கடவுள் அந்த விக்கிரகத்தில் எழுந்தருளச்செய்யப்படுகிறார். இங்கிருந்து அவர் உங்களை விசேஷரீதியில் பாதுகாத்தருளுவார். விக்கிரகம் பல அற்புதங்களைச் செய்யும். அது இருக்குமிடம் உடனேயே திருக்கோயிலாக, ஏன் உண்மையில் வைகுண்டமோ கைலாசமோ ஆகிவிடுகிறது. அத் தகையை இடத்தில் வசிக்கிறவர்கள் துன்பங்களி லிருந்தும், பிணிகளிலிருந்தும், தோல்விகளிலிருந்தும், சம்சார பந்தத்திலிருந்தும் விடுவிக்கப்படுகின்றனர். விக்கிரகத்தில் தூண்டப்பெற்ற இறைத்தன்மை அதை வணங்குகின்றவர்களுக்கு மிகுந்த நன்மையை அருளி, அனைவருக்கும் ஆசிவழங்குகிறது.

## சைதன்னியப் பிழம்பு-விக்கிரகம்

தெய்வீகத்தின் சின்னமே விக்கிரகம். அவ்வரிய விக்கிரகத்தில் பக்தன் ஒரு கல்லையோ, உலோகத்தையோ காண்பதில்லை. அது அவனுக்குக் கடவுளின் சின்னம். அவன் அந்தப் பிரதிமையில் இறைவனின் தோற்றத்தைக் காண்கிருன். தென்னிந்தியாவில் தோன்றிய சைவ நாயன்மார்கள் அனைவரும் சிவபிரானின் உருவமான சிவலிங்கத்தை வழிபடுவதன் மூலமே ஆத்மானுபூதி அடைந்தனர். பக்தனுக்கு ஒரு விக்கிரகம் சைதன்யப் பிழம்பாகும். அவன் விக்கிரகத்திலிருந்து புத்துணர்வைப் பெறுகிருன். விக்கிரகம் அவனுக்கு வழிகாட்டுகிறது. அது அவனுடன் பேசுகிறது. அவனுக்குப் பல்வேறு விதங்களில் உதவி செய்வதற்காக அது மனித உருக் கொண்டு நிற்கிறது. மதுரையிலுள்ள திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் விக்கிரகம் விறகு வெட்டிக்கும் கிழவிக்கும் உதவி புரிந்தது. திருப்பதி கோவிலிலுள்ள விக்கிரகம் மனித உருவமெடுத்து பக்தர்களுக்கு உதவிபுரியும் பொருட்டு நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் கூறியது அநேக அற்புத நிகழ்ச்சிகள் இம்முறையே நடைபெற்றுள்ளன. இவையனைத்தையும் பக்தர்களால்தான் புரிந்துகொள்ள முடியும்.

## விக்கிரகம் உயிர்பெற்ற காலம்!

பக்தன் அல்லது ஒரு முனிவருக்கு ஜடப்பொருள் என்பதொன்றே கிடையாது. அவருக்கு எல்லாம் வாசுதேவமயம். விக்கிரகத்தில் பக்தன் சாக்ஷாத் எம்பெருமானையே காண்கிருன். நரசிமேத்தாவை அரசன் சோதனை செய்தான். அரசன் சொன்னுன்:—

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE MADRAS-600 008
11107

“ஓ நரசி! நீர் கண்ணபிரானின் உண்மைப் பக்தனுனல் நீர் சொல்வது போல் இந்தப் பிரதிமையே ஸ்ரீகிருஷ்ணனுக இருந்தால், இந்த் விக்கிரகம் நகர்ந்து செல்லட்டும், பார்க்கலாம்,” என்ருன்! உடனேயே நரசி மேத்தாவின் வேண்டுகோளுக்கிணங்க **விக்கிரகம் நகர்ந்து செல்லத் தொடங்கியது. அதுபோலவே, சிவலிங்கத்தின் முன்னிருந்த நந்தி துளசிதாசர் கொடுத்த உணவை வாங்கி உண்டது! மூர்த்தி மீராபாயுடன் விளையாடியது.** அது அவளுக்கு உயிர்பெற்றுச் சைதன்ய மயமாக விளங்கியது.

திருப்பதி கோவிலுக்கு அப்பய்ய தீக்ஷிதர் சென்ற பொழுது கோவிலுக்குள் செல்ல வைஷ்ணவர்கள் தடை செய்தனர். அடுத்த நாள் காலை கோவிலிலுள்ள விஷ்ணு மூர்த்தி சிவமூர்த்தியாக மாறியிருப்பதை அவ் வைஷ்ணவர்கள் கண்டனர்! தலைமைப் பூஜாரி இதைக் கண்டு ஆச்சரியமும் திகிலும் அடைந்தார்! அப்பய்ய தீக்ஷிதரிடம் மன்னிப்புக்கோரி, பழைய மாதிரி விஷ்ணு மூர்த்தியாக்கித் தரவேண்டி நின்ருர்!

தென்கன்னடப் பிரதேசத்தில் உடுப்பியிலுள்ள கண்ணபிரானின் பெரும்பக்தர் கனகதாசர். கீழ் ஜாதியில் பிறந்த காரணத்தால் கோவிலுக்குள் செல்ல அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கோவிலைச்சுற்றிச் சென்ற கனகதாசர் கோவிலுக்குப் பின்புறத்தில் சிறியதோர் ஜன்னல் இருப்பதைக் கண்ணுற்ருர். அந்த ஜன்னலுக்கு முன்னதாக அவர் உட்கார்ந்து கொண்டார். பகவான் பேரில் பாடத்தொடங்கி அப்படியே பக்திரசத்தில் மூழ்கிவிட்டார். மக்கள் பெருந்திரளாக அவரைச் சுற்றி நிற்கத் தொடங்கினர். பக்தி மிகும் அவருடைய இனிய கானங்களைக் கேட்ட

மக்களும் மெய்மறந்து நின்றனர். பகவான் கண்ணன் திரும்பி நின்று கனகதாசருக்குத் தரிசனம் அளித்தார். பூசாரிகளுக்கு இது வியப்பை உண்டு பண்ணியது. இன்னும் அந்த ஜன்னலும் கனகதாசர் இருந்து கீர்த்தனங்களைப் பாடிய இடமும் யாத்திரீகர்களுக்குக் காட்டப்படுகிறது.

## வேதாந்தமும் விக்கிரக வழிபாடும்

கோவிலிலுள்ள விக்கிரகத்தின் முன் பணிந்தேற்ற போலி வேதாந்தி வெட்கப்படுகிறான். விழுந்து வணங்குவதால் தனது அத்துவிதம் வற்றி விடுமோ வென்று அவன் எண்ணுகிறான்! அப்பர், சுந்தரர், சம்பந்தர் முதலிய தமிழ்ப்பெரியார்களின் வாழ்க்கைச் சரிதங்களைப் படியுங்கள். அவர்கள் மிக உயரிய அத்து வித அனுபூதியை அடைந்தனர். அவர்கள் எங்கும் சிவபெருமானைக் கண்டனர். எனினும் சிவன் கோவில்கள் அனைத்திற்கும் சென்று, விக்கிரகங்களின் முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிப் பாடியுள்ள பாக்கள் ஏடுகளில் பொறிக்கப்பெற்றுள்ளன. அறுபத்தி மூன்று நாயன்மார்களும் சரியை கிரியைகளை மட்டுமே கடைப்பிடித்து அதன் மூலம் ஆத்மானுபூதியைப் பெற்றனர். அவர்கள் கோவில் தளத்தைப் பெருக்கிச் சுத்தப்படுத்தினர்; பூப்பறித்து மாலைகள் செய்தனர்; கோவில் விளக்குகளை ஏற்றி வைத்தனர். அவர்கள் பள்ளிப்படிப்பைப் பெற்றவர் அல்லர். எனினும் மிகச் சிறந்த ஆத்மானுபூதியை அடைந்தனர். அவர்கள் நடைமுறை யோகிகளாகத் திகழ்ந்தனர். அவர்கள் உள்ளத்தில் தூயபக்தி மிகுந்திருந்தது. அனைவரும் சம்பூர்ண யோகத்தை அப்பியசித்தனர்.

அத்துவித அனுபூதியைப் பெற்றிருந்த மதுசூதன சுவாமிகள் குழலூதும் கிருஷ்ண விக்கிரகத்தில் மிகுந்த பக்தி பூண்டிருந்தார்.

மிகச்சிறந்த ஆத்மானுபூதியை அடைந்திருந்த துளசிதாசருக்கு கையில் வில்லேந்திய ராமவிக்கிரகத் தினிடம் அளவு கடந்த பக்தி நிலவியது. அவர் பிருந் தாவனம் சென்றிருந்த பொழுது, குழலூதும் கண்ண னின் விக்கிரகத்தைக் கண்டார். ஆனுல் அந்த விக்கி ரகத்தை வழிபட மாட்டேன் என்று அவர் மறுத்து விட்டார். உடனேயே அந்த விக்கிரகம் ராமவிக்கிரக மாக மாறியது! அதன்பிறகே துளசிதாசர் அதை வணங்கினுர்!! துளசிதாசரைப் போன்ற அனுபவம் துக்காராமுக்கும் ஏற்பட்டது. *"கரும்பில் இனிமை நிலவு வது போல் பகவானை சர்வவியாபியாகக் காண்கிறேன்''* என்று தமது அபங்காவில் அவர் பாடியுள்ளார். என்ருலும் பண்டரிபுரத்திலுள்ள விட்டல பகவானையே அவர் சதா துதிசெய்து வந்தார். சர்வவியாபியான கண்ணனுடன் ஒன்றுபட்ட தன்மையை உணர்ந்த மீராபாய் "எனது கிரிதரநாதர்!'' என்று கூறுவதில் சளைக்கவில்லை.

மேற்கூறிய உண்மைகளிலிருந்து விக்கிரக வழி பாட்டின் மூலம் ஒருவன் ஆத்மானுபூதியை அடையலாம் என்பதை நாம் தெளிவாகக்கண்டு கொள்ளலாம்; சகுண உபாசனை வேதாந்த முறையிலமையும் ஆத் மானுபூதிக்குப் பெரும் உதவியாக இருப்பதையும் தெரிந்து கொள்ளலாம். மனஒருமைப்பாட்டிற்கும் தியானத்திற்கும் விக்கிரகவழிபாடு ஆரம்பத்தில் இன்றி யமையாதது என்ற உண்மையையும் நீங்கள் புரிந்து கொள்ளலாம். மூர்த்திபூசையைப் பற்றி இழிவாகப் பேசுகிறவர்கள் ஆழ்ந்த அறியாமையில் கிடந்துழலு

வதையும், பூசைவழிபாடுகளைக்குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியாதென்பதையும், தாங்கள் அறிஞர்கள் என்பதைக்காட்ட விக்கிரகவழிபாட்டிற்கு எதிராக வீண் விவாதம் செய்பவர்களே அவர்கள் என்பதையும், அவர்கள் உண்மையான சாதனை எதையும் செய்ய வில்லை என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் வீண்பேச்சில் ஈடுபடுவதையே தங்கள் வழக் கமாகக் கொண்டவர்கள். அவர்கள் தங்களைத்தாங்களே கெடுத்துக்கொண்டவர்கள். அவர்கள் எண்ணற்றவர் களின் மனதைக்கெடுத்து விட்டனர். அகில உலகமும் ஏதாவதொரு முறையில் சின்னங்களையே வழிபடுகிறது. இத்தகைய சின்னங்களில் பதிய வைப்பதனுல் மனம் ஒழுங்குபடுத்தப் படுகிறது. நல்லமுயையில் ஒன்றுபடத் தொடங்கிய பிறகு ''அஹம் பிரம்மாஸ்மி'' என்ற தத்து வத்தில் மனதைப்பின்னர் ஒன்றித்து நிற்கச்செய்யலாம். தியானத்தில் முன்னேறிச்செல்லும் பொழுது உருவம் அருவத்தில் கரைந்து விடுவதுடன், தியானிக்கிறவனும் அந்த அருவத்துடன் ஒன்ருகிவிடுகிருன்! விக்கிரக வழி பாடு வேதாந்தக்கருத்துக்கு மாறுபட்டதல்ல. அது வோர் சிறந்த உதவியாகும்.

## ஆசார பக்தியும் பராபக்தியும்

ஆசாரபக்தி என்றும் பராபக்தி என்றும் பக்தி இரு வகைப்படும். ஆசார முறையிலமையும் வழிபாடுதான் வைதி இல்லது கெளணிபக்தி எனப்படுவது. அதுதான் உருவ வழிபாடு. புறஉதவிகளை நம்பிநிற்கும் பக்தியே வைதிபக்தி என்பது. மனம் இதில் மேலும் மேலும் தூய்மைப்படுகிறது. ஆசாரவழி பாடுகளின் மூலம் சாதகன் கடவுளிடம் மெல்ல மெல்ல பக்தியை வளர்க்

கிருன். இவ்வகையில் ஆசாரபக்தியில் ஈடுபடுகிறவன் மணியடித்து, விக்கிரகத்திற்கு அலங்காரம் செய்து, பூ, சந்தனம், சாம்பிராணி, சூடத்தட்டு ஆகியவற்ருல் விக்கிரகத்திற்குப் பூசைஆரத்தி முதலியன செய்வதோடு அதற்கு நைவேத்தியமும் வைத்து வழிபடுகிருன்.

முன்னேற்றமடைந்த பக்தி நிலேயே முக்கிய பக்தி அல்லது பராபக்தி. இதுவே உயரிய பக்தி. இது சமய ஆசாரங்களேயெல்லாம் கடந்து நிற்கிறது. இம்முறையில் அமையும் பக்தன் ஒருவன் சமய நியதிகளுக்குக் கட்டுப்படமாட்டான். அவன் புறவழிபாடுகளேச் செய்வதில்லே. எல்லாப் பொருளிலும், எங்கும் ஆண்டவனே அவன் காண்கிருன். அவன் இதயம் இறை அன்பால் நிறைந்து காணப்படுகிறது. அகில உலகமும் அவனுக்கு பிருந்தாவனமாகக் காட்சியளிக்கிறது. அவனது நிலே அளவிடற்கரியது. அவன் இன்ப வெள்ளத்தில் திளேத்து நிற்கிருன். அன்பு, தூய்மை, இன்பம் மூன்றையும் அனேவரிடத்திலும் அவன் பரப்பி நிற்கிருன்.

ஆரம்பத்தில் உருவ வழிபாட்டில் ஈடுபடும் சாதகன் எங்கும் இறைவனேக்கண்டு பராபக்தியை வளர்க்கிருன். வைதிபக்தியிலிருந்து அவன் ராகாத்மிக பக்தி அல்லது பராபக்திக்குச் செல்கிருன். அகில உலகையும் அவன் இறைவனுகக் காண்கிருன். நன்மை–தின்மை, சரி–தவறு அயோக்கியத்தனம் முதலிய எண்ணங்கள் அவனிடமிருந்து மறைந்து விடுகின்றன. தீயவனிடத்திலும், கொள்ளேக்காரனிடத்திலும், நாகப்பாம்பினிடத்திலும், தேளிடத்திலும், எறும்பு, நாய், மரம், தடி, கல், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தீ, தண்ணீர், பூமி முதலிய எல்லாவற்றினிடத்திலும் அவன் இறைவனேயே காண் கிருன். அவனது அனுபவம் விரித்துக்கூற முடியாத

வகையில் அமைகிறது. இவ்வுலகில் காணக்கூடிய கடவுளாக விளங்கும் அவ்வரிய பக்தர்கள் வாழ்க!

இந்துமதம் சாதகர்களை மெதுவாகத் தூலவிக்கிர கங்களிலிருந்து மனரீதியான பிம்பங்களுக்கும், பலதரப் பட்ட மனோ பிம்பங்களிலிருந்து ஒரே சகுணப்பிரம்மத் திற்கும், அதிலிருந்து நிர்குணப்பிரம்மத்திற்கும் இட்டுச் செல்கிறது.

## இந்துமத வேதாந்தத்தின் பெருமை

இந்துமத வழிபாட்டு முறைகளினுடையவும் இந்து மத தத்துவங்களினுடையவும் பெருமைதான் என்னே! அது உருவ வழிபாட்டுடன் நின்று விடுவதில்லை; அத் துடன் முடிந்து விடுவதுமில்லை! சாதகன் படிப்படியாக பக்தியின் உயர் நிலைகளுக்கும் சமாதி நிலைக்கும் இட்டுச் செல்லப்படுகிறான். விக்கிரகத்தை வழிபட்டாலும், அவன் மனக்கண்முன் சர்வவியாபியான கடவுளின் தன்மையை அவன் நிலைநிறுத்த வேண்டும். தனது இதயத்திலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் இருந்து வருவதாக அவன் கருதவேண்டும். சிறியதோர் விக்கிர கத்தை வழிபடும் பொழுதும் புருஷசூக்தமெனும் மந்திரத்தை உச்சரித்து, எண்ணற்ற சிரங்கள், எண் ணற்ற கண்கள், கணக்கற்ற கைகள் ஆகியவைகளைக் கொண்டு அண்டமனைத்திலும் பரந்து நிற்பதோடு, எல்லாப் பிராணிகளினுடையவும் இதயகமலங்களிலும் வாசம் செய்துவரும் ஆத்மனை எண்ணிநிற்க வேண்டும். சாம்பிராணி மற்றும் கற்பூர ஆரத்தியை விக்கிரகத்தின் முன் செய்யும் அதே நபர் கீழ்க்கண்டவாறு கூறுகிறான்; "அங்கு சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ, மின்னலோ பிரகாசிப்பதில்லை. இந்நிலைமையில் இந்தச் சிறிய தீபம் எங்ஙனம் அங்கு பிரகாசிக்க முடியும்!

அவரால் எல்லாம் பிரகாசிக்கின்றன. அவரது ஜோதியே உலகத்தைப் பிரகாசமுறச் செய்கின்றது". இந்துமத நூல்களில் விதித்துள்ள பூசைமுறைகளும் வழிபாட்டின் ரகசியங்களும் விஞ்ஞான ரீதியாகச் சரியானவையும் உயரிய பகுத்தறிவு முறையில் அமைந்தவையுமாகும். மறை நூல்களைக் கற்றுணராத அஞ்ஞானிகளே விக்கிரக வழிபாட்டை இழித்துக்கூறுவார்கள். பக்தர்களுடனும், மகாத்மாக்களுடனும் தொடர்பு கொள்ளாதவர்களே உருவ வழிபாட்டைப் பழித்துரைப்பார்கள்.

மற்றெல்லா மதங்களும் குறிப்பிட்ட சில ஸ்திரமான கோட்பாடுகளை விதித்து அவற்றை மக்கள் கைக்கொள்ள வற்புறுத்த முயலுகின்றன. பல்வேறு வியாதிகளைக் குணப்படுத்த அவை ஒரேவிதமான மருந்தைத்தான் கொடுக்க முற்படுகின்றன. எல்லா நிலைமைகளிலும் அனைவருக்கும் ஒரே விதமான உணவையே அவை கொடுக்க முனைகின்றன. அந்த மதங்கள் தங்கள் வழி நிற்பவர்களுக்கு ஒரே ஒரு அங்கியைத்தான் முன்வைக்கின்றன. அது அல்பெர்ட், அட்கின்சன், அல்லுவாலா, அன்தோணி, அப்துல்ரஹ்மான் அனைவருக்கும் பொருந்த வேண்டும். விக்கிரகங்கள், குறிசுகள், பிறைச் சந்திரனின் சின்னங்கள் அனைத்தும் ஆரம்பத்தில் மன ஒருமைப்பாட்டுக்கு வகை செய்யும் சின்னங்களே என்பதை இந்துக்கள் அறிவார்கள். சின்னங்கள் அனைவருக்கும் தேவையானவை அல்ல இந்து மதத்தில் அது கட்டாயப்படுத்தப்படும் பொருளும் அல்ல. முதிர்ந்த நிலையிலுள்ள யோகிக்கோ துறவிக்கோ அது தேவையில்லை. முதல் வகுப்பிலுள்ள சிறுவர்களுக்குப் பயன்படும் சிலேட்டுப் போன்றதே சின்னம் அல்லது குறி. அது தேவையில்லாதவர்களுக்கு அதைத் தவறெனக்கூறும் உரிமை சிறி

தேனும் கிடையாது. அதைத் தவறென்று அவர்கள் கூறினல் அது அவர்கள் அறியாமையையே குறிக்கும்.

## சாராம்சம்

ஆரம்ப நிலேயில் ஒரு விக்கிரகத்தை வணங்குவதில் தவறில்லே. கடவுளேயும் அவரது அரிய பண்புகளேயும் அதன் மீது ஏற்றி எண்ணவேண்டும். அந்த உருவத்தில் மறைந்துள்ள அந்தராத்மாவையே நீங்கள் எண்ண வேண்டும். தான் வழிபடும் கடவுள் அந்த விக்கிரகத்தில் இருப்பதாகவும், எல்லாப் பிராணிகளின் இதயங்களிலும் அவர் வசிப்பதாகவும், இவ்வண்டத்திலுள்ள எல்லா நாமரூபங்களிலும் அவர் உறைவதாகவும் மெல்ல மெல்லச் சாதகன் உணரத் தொடங்குகிருன். அவர் எங்கும் வியாபகமாக இருப்பதையும் அவன் அறிய முற்படுகிருன்.

விக்கிரக வழிபாடு சமயத்தின் தொடக்கமேயாகும். அது அதன் முடிவல்ல என்பது உறுதி. விக்கிரக வழி பாட்டை ஆரம்ப நிலேயிலுள்ள சாதகர்களுக்கு எடுத்துக் கூறும் இந்துமதநூல்கள் முதிர்ந்த சாதகர்களே எல்லே யற்ற பரம்பொருளேயோ அல்லது 'தத்துவம் அஸி' மகாவாக்கியத்தின் உட்பொருளேயோ தியானிக்க வேண்டுகின்றன.

வழிபாடுகள் பலதரப்பட்டவை. முதலாவதுதான் விக்கிரக வழிபாடு. மந்திரங்களேச் சொல்லி பிரார்த்தனே கள் செய்வது இரண்டாவது வகையாகும். பூக்கள் கொண்டு வழிபடுவதைவிட மன வழிபாடு சிறந்தது. பரம்பொருள் அல்லது நிர்குணப் பிரம்மனேத் தியானிப் பதுதான் அனேவருக்கும் சிறந்தது.

மிக உயரிய நிலைதான் ஆத்மானுபூதி அல்லது பிரம்மசாக்ஷாத்காரம். அதற்கு அடுத்ததாக அமைகிறது தியானம். பரமாத்மனைத் தொடர்ந்து தியானித்து வருகிறான் யோகி. மூன்றாவதுதான் விக்கிரகவழிபாடு அல்லது குறிகளை வணங்குதல். நான்காவதாக சமயச்சடங்குகளும் புனித இடங்களுக்கு யாத்திரை செய்வதும் அமைகின்றன. சாத்திரங்களும், குருமார்களும் கருணை மிகும் அன்னை போன்றவை. அவை சாதகனைக்கையைப் பிடித்துப் படிப்படியாக, ஒவ்வொரு நிலையாக, அழைத்து வந்து நிர்விகல்ப சமாதி நிலைக்குக் கொண்டு விடுகின்றன. இவை ஆரம்பநிலைச் சாதகனுக்கு ஆத்மீக சாதனைகளை விதிக்கின்றதுடன் கூரிய மதியுடைய முதிர்ந்த சாதகனுக்கு நிர்குணப்பிரம்மத் தியானத்திற்குரிய போதனையும் செய்கின்றன.

ஒவ்வொன்றும் முன்னேற்றப்பாதையில் ஒவ்வொரு நிலையைக் குறிக்கின்றன. தனது பலத்திற்கும் மனப் பக்குவத்திற்கும் தகுந்தாற்போல் பரம் பொருளைத் தெரிந்து உணர ஜீவாத்மா வெவ்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபடுகிறது. அந்த ஜீவாத்மா உயர்ந்து சென்று மேலும் மேலும் வலுவைப்பெற்று, இறுதியில் பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து ஒன்றாகி விடுகிறது.

கீழ்நிலையிலிருந்து படிப்படியாக உயரிய வழிபாட்டு முறைகளுக்கு அழைத்துச் சென்று இறுதியில் சர்வ வியாபியான நிர்குணப் பிரம்மத்தை அடைய உதவும் இந்து ரிஷிகளும் இந்துமத நூல்களும் சிறந்து விளங்குவார்களாக!

ஆண்டவனின் அருமைப் புதல்வர்களே! உங்களிடமுள்ள அறியாமைமிகும் அவநம்பிக்கையை இந்த

நிமிடமே அகற்றிவிடுங்கள். உங்கள் இதயத்தில் உறுதியான உயர்நம்பிக்கையை இப்பொழுதே பிரதிஷ்டை செய்யுங்கள். ஸ்ரீ மீரா, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், தென்னிந்திய ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரின் சீரிய உதாரணங்களை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். அவர்கள் 'அவனை' நம்பினார்கள். அதற்குரிய பெரும் விளைவைப் பெற்றார்கள். விக்கிரக வழிபாட்டில் நம்பிக்கை கொண்டால் நீங்களும் உயரிய சாந்தி, இன்பம், செழிப்பு ஆகியவற்றை இங்கேயே அனுபவிப்பதோடு அவனையும் அடையலாம்.

வெளிப்படையான ரீதியில் நீங்கள் அவ்வப்பொழுது வழிபாடுகளைச் செய்து வந்தாலும், உங்கள் இதயத்தில் உள்வழிபாடு இடைவிடாது நடந்து கொண்டே இருக்க வேண்டும். இங்கு வழிபாடு பூரணத்துவத்தைப் பெறுகிறது. வாழ்வு ஒரு தெய்வீக வழிபாடாகும். விராட்டின் அகில உலக வழிபாட்டை அன்றாட வாழ்வில் நீங்கள் உணர்ந்து, அங்ஙனமே வழிபட்டு, வாழ்வின் உயர்நிலையை அடைவீர்களாக! அனைவரையும் ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக!!

## 2. திருக்கோயில்

இந்தக் கலியுகத்தில், இந்த உலகாயதப் போக்கு மிகும் உலகத்தில், ஒன்றித்தல் மற்றும் தியானத்தின் மூலம் மனித மனவளர்ச்சிக்குத் திருக்கோயில் பெரும் வாய்ப்புக்களை அளிக்கின்றது. கோயில் பிராகாரம் மிகவும் புனிதமானது. வேறெந்தச் சூழ்நிலையும் அளிக்க முடியாததொரு அமைதியை அது நமக்கு அளிக்கிறது. அந்த இடம் முழுவதிலும் தெய்வீகம் அலைமோதுகிறது.

மூன்று காலங்களிலும் முறையே பூசை செய்வதனுலும், புனித வேத மந்திரங்களையும் விசேஷ மந்திரங்களையும் வருடம் முழுவதும் சொல்வதனுலும், கோவிலின் புனிதத் தன்மை நாளுக்கு நாள் அதிகரித்து மனிதனுக்கு மிக உயரிய சாந்தியை அளிக்கும் அளவுக்குக் கோயில் சூழ்நிலையும் அமைந்து விடுகிறது.

பரம்பொருளின் மூர்த்தி எழுந்தருளப்பெற்றுள்ள கர்ப்பக்கிருகம் வெறும் இடமாகும். அங்கு நிலவும் அபாரமான ஆத்மிகத் தன்மை மக்கள் மனதை உயரிய பரிசுத்தத் தன்மைக்கு மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கிறது. அன்ருடம் செய்யப்படும் பிரார்த்தனை, பூசைகள், அபிஷேகம், அர்ச்சனை முதலியன கோயில் சூழ்நிலையைப் புனிதமாக்கிக் கோயிலுக்குள் செல்கின்ற அனைவரிடத்திலும் பக்திச் சிரத்தையை ஊட்டக் கூடியதாக்கி விடுகின்றன. தெய்வீக வழிபாட்டுக்குரிய இடங்களைச் செவ்வனே வைத்திருப்பதற்குரிய நிபந்தனைகளின்படிக் கோயில்களின் புனிதத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும். அகத்தூய்மை புறத் தூய்மை இரண்டும் கோயிலிலுள்ள மூர்த்திவழிபாட்டுக்கு அவசியமானவைகளாகும்.

கடவுளின் அர்ச்சாவதாரத்திற்கு என வகுக்கப் பட்டுள்ள திருக்கோயில் விராட் புருஷனின் காணக் கூடிய பிரதிநிதித்துவமாகும். அங்கு நடைபெறக் கூடிய ஆராதனை முறைகள் அனைத்தும் ஆத்மீகசாதனை முறையைக் குறிப்பதாகும். பரமேசுவரனுக விளங்கும் அந்தர்யாமி வாசம்செய்யும் அண்டத்தின் சிறு தோற்றமே கோயில். அங்கு நாம் அவ்வந்தர்யாமியை வழிபடுகிருேம். சுருதி, ஸ்மிருதிகளிலுள்ள சக்தி வாய்ந்த மந்திரங்கள் மற்றும் தந்திரங்கள் மூலமாகக்

கடவுள் அங்கு ஆவாகிக்கப்படுகிருர். கோயிலிலுள்ள மூர்த்தி தெய்வீக சக்தியின் தோற்றமாக ஆகிவிடுகிறது. பக்திமிகும் அர்ச்சகனின் வேண்டுகோள்களை நிறை வேற்றி வைக்க அது தயாராக நிற்கிறது.

இறைஅன்பை வளர்ப்பதற்குரிய எளிய வழி அர்ச்சனை தான். அது பக்தன் இருக்கும் உலகிற்கும் பரம்பொருளுக்கும் இடையே தொடர்பாக அமைந்து விடுகிறது. அர்ச்சனை பக்தியின் ஒரு விசேஷ அம்சம். அது மனிதனில் சூக்ஷ்ம ரீதியிலமையும் சமய உணர்வுக் குரிய நாட்டத்தை ஏற்படுத்துகிறது. எனவே, ஆத்மீக முயற்சியாலும் ஆத்மானுபூதியாலும் அமைக்கப்படும் அஸ்திவாரமே அர்ச்சனையாகும். கடவுளை அடைய மனிதன் விரும்பும் ஒன்பது அரும் பக்திப் பாதைகளுள் அர்ச்சனையும் ஒன்ருகும்.

தீவிர பக்திச்சிரத்தையுடன் கடவுளை வழிபடுங்கள். கட்டாயமாக அவர் உங்கள் மீது தமது அருளைச் சொரிவார். கோயிலைக் கட்டிவைப்பவனும், தாமாகவே அதைக் கட்டுகின்றவனும், அதற்கு உதவி செய்பவனும், அதைப் பற்றிச் சந்தோஷம் கொள்கின்றவனும், அதில் சென்று வழிபடுகிறவனும், அங்குள்ள விக்கிரகத்தின் முன் விழுந்து வணங்குகின்றவனும், சதா இறைவனை மனதில் தியானிக்கிறவனும் அனுக்கிரகிக்கப்பட்டவர் களேயாவர். கடவுள் எங்கும் வியாபகமாய் நிற்கிருர். எல்லா உயிர்களிடத்திலும் அவர் கொண்டுள்ள உயரிய கருணையால் குறிப்பிட்ட இடங்களில் தன்னை வணங்க அவர் அனுமதிக்கவும் செய்கிருர்.

# 3 பிரசாதத்தின் பெருமை

சாந்தியைத் தருவது எதுவோ அதுவே பிரசாதம். கீர்த்தனம், வழிபாடு, பூஜை, ஆரத்திநேரங்களில் பாதாம்பருப்பு, கிஸ்மிஸ், பால், இனிப்புப் பொருள்கள், பழங்கள் முதலியன பகவானுக்கு நிவேதனம் செய்யப் படுகின்றன. பின்னர் அந்தப் பிரசாதம் பக்தர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது அல்லது வீட்டிலிருப்போர் பகுத்து எடுத்துக்கொள்கின்றனர். வில்வஇலை, பூ, துளசி, விபூதி ஆகியவற்ருல் பூஜை செய்யப்படுகிறது. இறைவனின் பிரசாதமாக அவை பின்னர் விநியோகிக் கப்படுகின்றன. சிவபெருமானின் பிரசாதம் விபூதி. நெற்றியில் தரிக்கப்படும் இதைக் கொஞ்சம் உள்ளுக்கும் உட்கொள்ளலாம். ஸ்ரீ தேவி அல்லது சக்தியின் பிரசாதம் குங்குமம். இது ப்ரூமத்யம் அதாவது இரு புருவங்களுக்கும் மத்தியில் வைக்கப்படுகிறது. பகவான் விஷ்ணுவின் பிரசாதம் துளசி. இதை உள்ளுக்கு உட்கொள்ள வேண்டும். பூஜை நேரங்களில் உச்சரிக் கப்படும் மந்திரங்களிஞல் இவை அற்புத சக்தி வாய்ந் தவையாக அமைகின்றன.

பகவானுக்கு வழிபாடு செய்யும் பக்தனின் மஞே பாவத்திற்கு மிகச் சிறந்த பலனுண்டு. சிறந்த பக்தன் ஒருவன் இறைவனுக்கு நிவேதனம் செய்த பொருளை உட்கொண்டால் அது நாத்திகர்களின் மனதில் கூடப் பெரும் மாறுதலை ஏற்படுத்தும். இறைவனின் திருவருள் பிரசாதத்தின் மூலமே இறங்குகிறது. நாரத முனிவரின் வரலாற்றைப் படியுங்கள். இறைவனுடையவும் முதிர்ந்த சாதகர்களுடையவும் துறவிகளுடையவும் பெருமையை நீங்கள் உணருவீர்கள்.

நாமதேவர் பாண்டுரெங்கவிட்டல பகவானுக்குப் படைத்த நைவேத்தியத்தை நாமதேவருடன் சேர்ந்து இறைவனே உட்கொண்டான். உள்ளன்புடன் படைக்கப்படும் நைவேத்தியத்தைச் சில நேரங்களில் ஸ்தூல உருக்கொண்டு பகவானே நேரில் தோன்றி உட்கொள்ளுகிறார். ஏனையவற்றில் பகவான் நைவேத்தியத்தின் சூக்ஷ்ம சாரத்தைக்கொள்வதனால் பிரசாதம் அப்படியே இருந்துவிடுகிறது. மகாத்மாக்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்தளிக்கும்போது எஞ்சியிருப்பது பிரசாதமாகிறது. ஒரு யஜ்ஞம் நடத்தப்படும்பொழுது அதில் பங்குகொள்ளுகிறவர்கள் இறையருளைத்தரும் பிரசாதத்தைப் பகிர்ந்துகொள்கின்றனர். தசரதன் புத்திரகாமேஷ்டியாகம் செய்தபொழுது "பாயாசம்" கிடைத்தது. அதை அவன் தமது பட்டமஷிகளுக்குக் கொடுத்தான். அரசிகள் அதை வாங்கி உண்டனர். அதனால் அவர்கள் கர்ப்பம் தரித்தனர். பக்தனுக்குப் பிரசாதம் மிகப் புனிதமானது. பிரசாதத்தைப் பெறுவதால் ஒருவன் தன்னைப் பாக்கியவானாகக் கருத வேண்டும். இவ்வரிய பிரசாதத்தைக்கொள்வதில் நிபந்தனை ஏதும் கிடையாது. காலம், இடம், சூழ்நிலை மூன்றும் அவனை ஒன்றும் செய்யாது. பிரசாதம் அனைத்தையும் புனிதப்படுத்துவதாகும்.

பிரசாதத்தினுடையவும் சரணாமிருதத்தினுடையவும் நன்மைகள் அளவிடற்கரியவை. மனிதனுடைய வாழ்வின் நோக்கத்தைப் பூராவும் மாற்றியமைக்கும் சக்தி அவைகளுக்குண்டு. பிணிகளைக் குணப்படுத்துவதற்கும், மரித்தவர்களை உயிர்பெறச் செய்வதற்கும் இவ்விரண்டிற்கும் வல்லமை உண்டு. இவ்விரண்டினுடையவும் சிறந்த பலன்களை நிரூபிக்கும் பற்பல நிகழ்ச்சிகள் நம்புனித நாட்டில் நிகழ்ந்துள்ளன.

எல்லாத் துன்பங்களையும் பிரசாதம் போக்குகிறது. துன்பத்தையும் கவலையையும் தீர்ப்பதற்குரிய மருந்தே இந்தப்பிரசாதம். இக்கூற்றை ருசுப்பிக்க நம்பிக்கை தேவை. நம்பிக்கையற்றவர்களுக்கு இது அவ்வளவாகப் பலன் தருவதில்லை.

நாகரிகக் கல்வி மற்றும் புதிய பண்பாட்டில் ஊறித் திளைத்தவர்கள் புனிதப் பிரசாதத்தின் பெருமையை அப்படியே மறந்து விட்டனர். ஒரு மகாத்மாவிடமிருந்து பெறும் பிரசாதத்திற்கு ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள் பலர் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இதுவோர் பெரும் தவறு. பிரசாதம் சிறந்த முறையில் தூய்மைப் படுத்தும் பொருளாகும். மேல்நாட்டு வாழ்க்கை அமைப்பில் வளர்ந்துள்ளதால், மேல் நாட்டவர்களின் உணர்ச்சியைப் பெற்று நிற்கும் அவர்கள் முற்காலத்து இந்திய முனிவர்களின் உண்மைக் குழந்தைகளின் உயரிய உணர்ச்சியை மறந்து விட்டனர். பிருந்தாவனம், அயோத்தி, வாரணாசி, பண்டரிபுரம் ஆகிய இடங்களுள் ஏதாவதொன்றில் ஒரு வாரம் இருங்கள். பிரசாதத்தின் அற்புத சக்தியை உடனே நீங்கள் உணருவீர்கள். குணப்படாத வியாதிகள் பல குணமடைகின்றன. ஆத்மார்த்த சாதகர்கள் அற்புத ஆத்மீக அனுபவங்கள் பலவற்றைச் பிரசாதத்திலிருந்தே பெறுகின்றனர். பிரசாதம் ஒரு சர்வரோக நிவாரணியாகும். அதுவோர் ஆத்மீக அருமருந்தாகும். இறைவனின் திருவருளே பிரசாதம். சக்தியின் தோற்றமே பிரசாதம். அது தெய்வீகத்தின் தோற்றமேயாகும். பிரசாதம் ஒருவனிடம் வலுவையூட்டி, ஊக்கத்தை உண்டுபண்ணி, பக்தியைப் பெருக்குகிறது. அதை மிகுந்த சிரத்தையுடன் பெறவேண்டும்.

நல்லாரோக்கியம், நீடித்த ஆயுள், அமைதி, செழிப்பு இந்நான்கையும் பிரசாதம் அனைவருக்கும் அளிக்கிறது. இவ்வரிய பிரசாதத்தின் பெருமையே பெருமை! இவ்வரிய பிரசாதத்தை அளித்து அருளும் இறைவனடியைப் போற்றுவோமாக.

## 4. சின்னங்களின் சீரிய தத்துவம்

வெளியிலுள்ள ஓசைகளைக் கேட்காமல் செய்து, மனதை உள்முகமாக்கி ஒன்றச் செய்யவே பூஜைநேரங்களில் கோவில்களில் மணி அடிக்கப்படுகிறது.

மூர்த்தியின் முன் தீபாராதனை செய்யப்படுகிறது, இறைவன் ஜோதிச்சொரூபன் என்பதையும் அவர் பூர்ணஜோதியே என்பதையும் இது குறிக்கிறது. "இறைவா! இவ்வண்டத்தின் சுயம்பிரகாசம் நீயே. சூரியன், சந்திரன், அக்கினியிலுள்ள பிரகாசம் நீயே. உனது தெய்வீகப் பிரகாசத்தை அருளி என்னிடமுள்ள இருளை அகற்றுவாயாக; எனது புத்தியைத் துலக்குவாயாக!'' என்று பக்தன் வேண்டுகிறான். இதுவே தீபாராதனையின் தத்துவம்.

விக்கிரகத்தின் முன் சாம்பிராணி போடப்படுகிறது. இதன் புகை அறை முழுவதும் பரவுகிறது. தொற்று வியாதிகளை மாற்றும் மருந்தாக இது அமைகிறது ஈசுவரன் சர்வவியாபி என்பதையும் தமது தோற்றத்தால் அகில உலகத்தையும் அவர் நிறைத்து நிற்கிறார். என்பதையும் இது குறிக்கிறது. இதை நினைவூட்டுவதற்காகவே சாம்பிராணி புகைக்கப்படுகிறது. "இறைவா! என்னிடம் மறைந்து கிடக்கும் வாசனைகளும் சம்ஸ்காரங்களும் இந்தப்புகை போன்று மறைந்து

சாம்பலாகட்டும். நான் களங்கமற்றவன் ஆவேனுக!", என்று பக்தன் கூறுகிருன்.

மனிதனிடமுள்ள ஆணவம் கற்பூரம் போன்று இளகிவிடுவதுடன் பரஞ்சோதியுடன் ஜீவாத்மன் ஒன்ருவதையே கற்பூரம் கொளுத்துவது குறிக்கிறது.

சந்தனத் திலகம் இடுவது அதைப் போன்று ஆபத்துக் காலங்களில் பக்தன் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. பூசப்பட்ட சந்தனத்திலிருந்தும் நல்ல வாசனை வருவதுபோன்று கஷ்டங்கள் தோன்றினுலும் முணுமுணுக்காது சந்தோஷத்துடன் நின்று சந்தனத்தைப் போன்று இனிமையையும் அமைதியையும் பக்தன் வெளிப்படுத்த வேண்டும். தன் பகைவனைக் கூட அவன் வெறுத்தல் கூடாது. இதிலிருந்து நாம் படிக்கும் மற்ருெரு பாடம் இது. சந்தனத்தை வெட்டி முறித்து அரைத்தாலும் பொறுமையாக அவற்றைச் சகித்துக்கொண்டு இனிய நறுமணத்தையே அது தருகிறது.

## 5. சிவலிங்க வழிபாடு

சிவலிங்கம் ஆண்குறியைக் குறிக்கிறதென்ற பொதுக்கருத்து மாபெரும் தவருகும். வேதகாலத்திற்குப் பின்னுள்ள காலத்தில் லிங்கம் சிவபெருமானின் ஆக்க சக்தியின் சின்னமாக விளங்கலாயிற்று. லிங்கம் என்பது வேறுபடுத்தும் குறியாகும். அது பால் வேற்றுமையைக் குறிப்பதாகாது. லிங்கபுராணம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது :

**"பிரதானம் ப்ர்கிருதி யதாஹுர்லிங்க முத்தமம்**
**கந்தவர்ண ரசரஹீனம் சப்தஸ்பர்சதிவர்ஜிதாம்."**

"மணம், நிறம், ருசி, கேள்வி, ஸ்பரிசம் முதலியன அற்றதும் முதன்மையானதும் எல்லாவற்றுக்கும் மேலானதுமான லிங்கம் பிரகிருதி (இயற்கை) எனப் பேசப்படுகிறது."

லிங்கம் என்றால் வடமொழியில் 'குறி' யென்பதாகும். அனுமானத்தைக் காட்டும் சின்னமே அது. நதியில் பெருவெள்ளம் பிரவகித்துச் செல்வதைக் கண்டால், முதல் நாள் கடும் மழை பெய்திருக்க வேண்டுமென்பதை நீங்கள் அனுமானிக்கிறீர்கள். எண்ணற்ற தோற்றங்களைக் கொண்ட இவ்வுலகம் சர்வசக்தி வாய்ந்த சர்வேசுவரனின் ஒரு லிங்கமாகும். சிவலிங்கம் சிவபெருமானின் சின்னமாகும். நீங்கள் சிவலிங்கத்தை நோக்கும் பொழுது உங்கள் மனம் உடனேயே உயர்நிலை அடைந்து நீங்கள் இறைவனை எண்ணத் தொடங்குகிறீர்கள்.

சிவபெருமான் உண்மையிலேயே உருவமற்றவர். அவருக்குத் தனக்கெனச் சொந்த உருவமொன்றும் கிடையாது. என்றாலும் எல்லாத் தோற்றங்களும் அவரது தோற்றமேயாகும். எவ்வுருவத்திலும் அவரே வாசம் செய்கிறார். எவ்வுருவமும் அவரது லிங்கம் அல்லது உருவமாகும்.

மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கானதோர் அற்புத சக்தி சிவலிங்கத்தில் உள்ளது. பளிங்கைப் பார்ப்பதன் மூலம் மனம் எளிதிலே ஒன்றுபடுவது போன்று, லிங்கத்திலும் மனம் ஒன்றுபட்டு நிற்கிறது. இந்தக் காரணத்தினாலேயே முற்கால ரிஷிமுனிவர்கள் சிவபெருமான் திருக்கோயில்களில் லிங்கப் பிரதிஷ்டைக்கு வழிகோலியுள்ளனர்.

“இரண்டல்லாத ஒன்றே நான், உருவமற்றவனே நான்,” என்று சிவலிங்கம் தவருகப் புரிந்துகொள்ள முடியாத மௌன மொழியில் உங்களிடம் கூறுகிறது. இதைப் புனித ஆத்மாக்களே புரிந்துகொள்ள முடியும். “இந்துக்கள் ஆண்குறியை வழிபடுகின்றனர். அவர்கள் அறிவில்லாதவர்கள். அவர்களிடம் தத்துவமேதும் கிடையாது” என்று அறிவு குன்றிய அந்நிய நாட்டான் கூறுகிருன். தமிழ் அல்லது இந்தியைக் கற்க முற்படும் அயல் நாட்டுக்காரன் ஒருவன் முதன்முதலாகக் கெட்ட வார்த்தைகளையே கற்க முயற்சிக்கிருன். இது அவனுடைய விநோத ஆர்வமாகும். அதே போன்று, உருவ வழிபாட்டிலும் சிலகுறைகளைக்காண முயலுகிருன் அவன். உருவமற்ற பரமசிவனின் வெளிச்சின்னமே லிங்கம். பிரிக்க முடியாதவர், சர்வவியாபி, நித்தியன், புனிதன், சதா தூய்மையுடையவன், பரந்த அண்டத்தின் நித்தியசாரம், இதயகுகையில் வாசம் செய்யும் அமர ஆத்மன், அந்தர்யாமி, அந்தரங்க ஆத்மா, பரப்பிரம்மனுக்கு சமமானவன்தான் பரமசிவன்.

ஸ்படிக லிங்கமும் சிவபெருமானின் சின்னமாகும். இது சிவாராதனைக்கு உகந்தது. ஸ்படிகத்தினுலாகிய இந்த லிங்கத்திற்கு நிறம் கிடையாது. ஆனுல் அத்துடன் சம்பந்தப்படுகின்ற பொருளின் நிறத்தை அது கொண்டு விளங்குகிறது. நிர்க்குணப் பிரம்மத்தை, அருவமான சிவத்தை அது குறிக்கிறது.

ஆத்மார்த்த பக்தனுக்கு லிங்கம் ஒரு கல்லல்ல. அது தேஜோமயம் அல்லது சைதன்ய வடிவம். அவனுடன் அது பேசுகிறது. கண்ணீர் வடிக்கச் செய்கிறது, மயிர்க் கூச்சலை ஏற்படுத்துகிறது, இதயத்தை உருக்குகிறது, இறைவனுடன் ஒன்றுபட்டு நிர்விகல்ப

சமாதி அடைய உதவுகிறது. ராமேசுவரத்திலுள்ள சிவலிங்கத்தை ஸ்ரீராமபிரான் வழிபட்டார். மிகுந்த பண்டிதனுக விளங்கிய இராவணன் தங்கலிங்கத்தை வழிபட்டு வந்தான். லிங்கத்தில் அமைந்து கிடக்கும் சக்தி தான் என்னே!

மன ஒருமைப் பாட்டிற்கு வழிகோலும் சிவபிரானின் சின்னமாகிய சிவலிங்கத்தை வழிபடுவதன் மூலம் நீங்கள் அனைவரும் உருவமற்ற சிவத்தை அடைவீர்களாக!!

# 6. நம்பிக்கையும் விக்கிரக வழிபாடும்

பூர்ணசந்திரனின் குரு அவனுக்கு நாராயண மந்திரதீக்ஷை அளித்திருந்தார். வழிபடுவதற்கு வேண்டி ஒரு சிறிய நாராயண மூர்த்தியையும் அவனுக்கு அவர் வழங்கியிருந்தார். பூர்ணசந்திரன் ஒழுங்காக வழிபாடு செய்து வந்தான். புனித மந்திரத்தை விடாது ஓதியும் வந்தான். ஆனுல் அந்த விக்கிரகம் அவனை ஆசீர்வதிப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. எனவே குருவினிடம் சென்று அதன் காரணத்தை அவன் வினவினுன். "மகனே! இதோ இந்தச் சிவவிக்கிரகத்தை எடுத்துக் கொள். நான் உனக்கு சிவமந்திரத்தை உபதேசம் செய்கிறேன். முழு நம்பிக்கையுடனும் பக்தியுடனும் சிவனை வழிபடு. அவர் உனக்கு விரைவாகவே அனுக்கிரகம் செய்வார்", என்று குரு சிரித்துக்கொண்டே பூர்ணசந்திரனிடம் கூறினுர்.

அடுத்த ஆறுமாதங்கள் சிவனை வழிபடுவதில் பூர்ணசந்திரன் ஆழ்ந்த கருத்துக் கொண்டு விளங்கினுன். நாராயண விக்கிரகத்தை பூசை அறையிலுள்ளதோர்

அழுக்கடைந்த அலமாரிக்குள் வைத்தான். சில மாதங்கள் சென்ற பின், சிவ வழிபாட்டிலும் தான் ஒரு நன்மையையும் அடையவில்லை என்று குருவிடம் பூர்ணசந்திரன் கூறி நின்ருன். தன்னை விரைவில் அனுக்கிரகிக்கக்கூடியதோர் மூர்த்தியைத் தந்து அத்தகைய மந்திரத்தை உபதேசிக்க அவன் குருவினிடம் வேண்டினன்.

மீண்டும் குரு சிரித்தார். விழிப்புக்கானநேரம் வந்து விட்டது. எனினும் அனுபவத்திலிருந்து சீடன் கற்றுக் கொள்வான் என்று அவர் எண்ணினர். எனவே சீடனிடம் "மகனே! இந்தக் கலியுகத்தில் காளிதான் பிரத்யக்ஷ தேவதை. அவளுடைய இந்த விக்கிரகத்தை வழிபடு. நவர்ண மந்திரத்தை உச்சரி. விரைவில் அவளுடைய திருவருளை நீ பெறுவாய்" என்று குரு கூறினர்.

காளி வழிபாடு தொடங்கப்பட்டது. அலமாரியில் நாராயண விக்கிரகத்துடன் சிவனுடைய விக்கிரகமும் வைக்கப்பட்டது! பக்திசிரத்தையுடன் காளி விக்கிரகத்திற்கு தூபதீபம் முதலியவை செய்கையில் சாம்பிராணிப் புகை மேலுள்ள நாராயண, சிவ விக்கிரகங்களுக்கும் செல்வதைப் பூர்ணசந்திரன் கண்டான். அவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. காளிக்குக் காட்டப்படும் இந்தப் புகையை சிவன் எப்படி அனுபவிக்கலாம் என்று எண்ணினன்! எவ்வளவு வழிபட்டும் சிவன் தன்னை அனுக்கிரகிக்க வில்லையே!! மிகுந்த கோபத்துடன் சிவ விக்கிரகத்தை கையில் எடுத்து அதன் இரு மூக்குத் துவாரங்களிலும் பஞ்சை அடைத்தான். இதனல் சாம்பிராணி மணம் அந்த விக்கிரகத்தின் மூக்கினுள் செல்லாதல்லவா?! இந்த வேலையைச் செவ்வனே செய்து முடிப்பதற்குள் அந்த விக்கிரகம் மறைந்து விட்டது! அந்த இடத்தில் புன்முறுவலுடன் கருணமூர்த்தியான சிவபெருமான் நின்று கொண்டிருப்பதைப் பூர்ண

ஓ2 N63

சந்திரன் கண்டான். ஆச்சரியம் மிகுந்தவனுய்க் காணப்பட்ட பூர்ணசந்திரன் சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து விழுந்து ஆண்டவனை வணங்கினுன். அவன்மீது மிகுந்த பிரீதிகொண்ட பரமசிவன் ஏதாவதொரு வரம் கேட்குமாறு பணித்தார்.

"ஆண்டவனே! எனக்கு இன்னது செய்வதுஎன்று தெரியவில்லை. பக்தியுடன் வழிபட்ட பொழுதெல்லாம் நீர் எனக்கு அனுக்கிரகிக்கவில்லை. அப்பொழுது ஆறு மாதங்களாக பஞ்சாக்ஷர மந்திரத்தையே சொல்லி வந்தேன். உம்முடைய விக்கிரகத்தை வழிபடுவதை நான் நிறுத்திய பொழுது நீர் திடீரென இங்ஙனம் தரிசனம் தர முன்வந்துள்ளீர்! இதென்ன விநோதம், ஆண்டவனே?" என்ருன் பூர்ணசந்திரன்.

"அருமைக் குழந்தாய்! இதில் எவ்வித விநோதமும் கிடையாது. என்னை வெறும் ஒரு விக்கிரகமாக மட்டும் நீ கருதிய பொழுது நான் எப்படி உன் முன் தோன்ற முடியும்? இன்று என் விக்கிரகத்தை உயிருள்ளதாகக் கருதி அதன் நாசித்துவாரங்களில் பஞ்சை அடைக்க நீ முனைந்தாய். அம்முறையே அந்த விக்கிரகத்தில் நான் இருப்பதாக நீ ஒப்புக் கொண்டாய். எனவே இனி மேல் நான் உன் முன் தோன்ருமல் இருக்க முடியாத நிலை வந்தெய்தினது,'' என்று சிவபெருமான் மறுமொழி கூறினர்.

விழிப்படைந்த பூர்ணசந்திரன் இறைவனுடைய பேரன்பில் மூழ்கினவனுய் நின்ருன். அவனுக்கு வேறு வரம் கேட்க வேண்டும் என்ற எண்ணமே அற்றுப் போயிற்று. ஏன்? அவன்தான் எல்லையில்லா இறை அன்பின் நிறைவைக் கண்டு கொண்டானல்லவா?!

---

TAMIL NADU ARCHIVES 111071

## ரிஷீகேசம் சிவானந்தாசிரம திவ்ய மருந்துகள்!

* பல்வியாதிகளைப் போக்கடிக்கும் சிவானந்த பல்பொடி!
* தலைநோய்களைப் போக்கிக் குளுமையை அளிக்கும் அம்லா கூந்தல் தைலம்!
* காசம், இளைப்பு, பலகீனம், இருமல் மற்றும் பல்வேறு பிணிகளை இல்லாதாக்கும் சியவனப் பிராசம்!
* எக்சிமாவை ஓடவைக்கும் க்யூர்எக்சிமா!
* சேற்றுப்புண், பித்தவெடிப்புக்குரிய புகழ் மருந்து பாதரட்சாமலம்!
* ஜலதோஷம். தொண்டைச் சளியைப் போக்கும் ஏலாதிவாடி!
* அஜீரணக்கோளாறுகளைப் போக்கும் க்ஷுதாவர்த்தக்!
* நீரிழிவை அகற்றும் மதுமேக நிவாரக்!
* ஆஸ்த்மா, ரத்தக் கொதிப்பு இதயநோய்களைப் போக்கும் வசந்த குசுமாகரம்!
* ரெத்தசுத்திக்குரிய சிறந்த டானிக் ஷிலாஜித்!
* வாதநோய்க்குரிய சந்திரப்பிரபா!
* குழந்தைகளின் திவ்ய மருந்து பால ஜீவனமிருதம்!
* மலச்சிக்கலைப்போக்கி ரத்தசுத்தியைத்தரும் திரிபலா சூர்ணம்!
* உடல்வலியைப் போக்கும் மகாநாராயண தைலம்
* வயிற்றுப்போக்கையும், வயிற்றுக்கடுப்பையும் குணப்படுத்தும் குடஜயோகம்

நயம் குங்குமப்பூ ! சுத்த இமாலயத் தேன் !
இன்றே வாங்குங்கள் ! பிணிதீர்ந்து பேரானந்தமடையுங்கள் !

—: கிடைக்குமிடம் :—

### சிவானந்த நிலையம்

3, சொக்கப்பநாயக்கர் தெரு, (தெற்குக்கோபுரம் சமீபம்)
மதுரை-1.

நிலையத் தொடர் 2

SIVANANDA NILAYAM PUBLISHERS MADURAI-1

விலை 50 ந. பை